# A Text Book

OF

# TAMIL GRAMMAR

Book II

By a Committee of Eminent Tamil Scholars)

# தமிழ் இலக்கணம்

இரண்டாம் புஸ்தகம்

[சிறந்த வித்வான்களால் நன்கு பரிசோதிக்கப்பெற்றது]

ஸ்ரீ

MACMILLAN & CO., LIMITED
MADRAS, BOMBAY, CALCUTTA AND LONDON
1920

*All Rights Reserved*

[விலை, 5 அணா

T. 12668

# MACMILLAN'S EASY SELECTIONS FROM TAMIL POETRY.

## பாலநீதிச் செய்யுள் திரட்டு.

ஔவையார் அதிவீர ராமபாண்டியன் முதலிய முற்கால வித்வ சிரோமணிகள் எழுதிவைத்த அருமையான நீதிநூல்கள், சிறுவர்கள் மனத்திலும் பதியக் கூடியவாறு தெளிவான எளியநடையில் மனப் பாடம் பண்ணுவதற்கு அனுகூலமான செய்யுள் வடிவில் அமைந் திருக்கின்றன. ஆதரிப்பாரில்லாமல் அந்நூல்கள் இப்பொழுது பாட சாலைகளில் அதிகமாகப் போதிக்கப்படவில்லை. தங்களைக் கல்வி மான்கள் என்று மதித்திருக்கும் பல தமிழ்மக்கள்கூடத் தங்கள் முன் னோர்களுக்கு அரிச்சுவடிப் பாடமான இவ்வரிய நூல்களைக் கண்ணாலும் கண்டறியாதவர்களா யிருக்கிறார்கள். இது தமிழ்நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் மிகவும் மானக்கேடான விஷயமன்றோ? இக்குறை பாட்டை நிவர்த்திக்கக் கருதி அவ்வரிய நீதிநூல்களைச் சிறுவர்களும் பிறரும் படிப்படியாய்க் கற்று அறிந்துகொள்வதற் கேற்றவாறு பல பகுதிகளாகப் பிரித்து, பதஉரையுடன், நல்ல கடிதத்தில் தெளிவான எழுத்துகளால் அழகாக அச்சிடலாயிற்று. அந் நீதிநூல்களின் பகுப் பும் அடக்கமும், வருமாறு :—

| | | அ. | பை. |
|---|---|---|---|
| **முதற்படி. (ஜூனியர்—Junior)** | | | |
| பகுதி 1. | உலகநீதி, ஆத்திசூடி .. .. .. (2—வது வகுப்புக்கு ஏற்றது). | 1 | 6 |
| ,, 2. | கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை .. (3—வது வகுப்புக்கு ஏற்றது). | 2 | 0 |
| ,, 3. | வாக்குண்டாம், நல்வழி .. .. (4—வது வகுப்புக்கு ஏற்றது). | 2 | 0 |
| **இடைப்படி (இன்டர்மீடியேட்—Intermediate)** | | | |
| பகுதி 1. | நீதிவெண்பா .. .. .. (5—வது வகுப்புக்கு ஏற்றது). | 2 | 6 |
| ,, 2. | நன்னெறி, இனிது 40, இன்னா 40 .. (6—வது வகுப்புக்கும் 1—ம் பாரத்துக்கும் ஏற்றது). | 3 | 0 |
| **உயர்படி (ஸீனியர் – Senior)** | | | |
| பகுதி 1. | முதுமொழிக்காஞ்சி, நீதிநெறி விளக்கம் .. (7—வது வகுப்புக்கும் 2—ம் பாரத்துக்கும் ஏற்றது). | 3 | 6 |
| ,, 2. | திரிகடுகம், நான்மணிக்கடிகை .. .. (8—வது வகுப்புக்கும் 3—ம் பாரத்துக்கும் ஏற்றது). | 5 | 0 |

# A Text Book

OF

# TAMIL GRAMMAR

## Book II

---

# தமிழ் இலக்கணம்

## இரண்டாம் புஸ்தகம்

உ

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்

சென்னை, பம்பாய், கல்கத்தா, லண்டன்.

1920

[ரிஜிஸ்தர் செய்தது]

## உள்ளுறை:

பக்கம்.

I. எழுத்தியல் ... ... ... ... ( 5–11)
i. உயிரெழுத்து ... ... ... 5
ii. மெய்யெழுத்து ... ... ... 7
iii. உயிர்மெய்யெழுதது ... ... 7
iv. ஆய்தவெழுத்து ... ... ... 10
v. இனவெழுத்து ... ... ... 10
vi. மாத்திரை ... ... ... ... 11

II. சொல்லியல் ... ... ... ... (12–48)
i. சொல் ... ... ... ... 12
ii. பெயர் ... ... ... ... 15
iii. வினை ... ... ... ... 27
iv. இடை ... ... ... ... 39
v. உரி ... ... ... ... 40
vi. சொல்லுறுப்பு ... ... ... 40
vii. வழக்கு ... ... ... ... 46

III. புணரியல் ... ... ... ... (49–61)
i. புணர்ச்சி ... ... ... ... 49
ii. பொருட்புணர்ச்சி : (1) வேற்றுமை, (2) அல்வழி ... ... ... 49
iii. எழுத்துப்புணர்ச்சி ... ... ... 54

IV. சொற்றொடரியல் ... ... ... (61–65)

அனுபந்தம் 1.—அப்பியாசங்கள் ... ... (65–67)
அனுபந்தம் 2.—வினைவிளக்க அட்டவணை ... (67–80)

# தமிழ் இலக்கணம்

## 1. எழுத்தியல்.

**1.** எழுத்து — ஒலிவடிவெழுத்தென்றும், வரிவடிவெழுத்தென்றும் இருவகை.

**2.** ஒலி வடிவெழுத்தாவது—மொழிக்குக் காரணமாகிய ஓசையே.

**3.** வரி வடிவெழுத்தாவது — ஒலிவடிவெழுத்தின் அறிகுறியாகக் கண்ணுக்குப் புலப்படும்படி எழுதப்படுவதே.

[குறிப்பு—எழுத்து என்னும் பெயர் வரிவடிவில் எழுதத் தொடங்கிய பின்னர் உண்டானதே. "எழுதப் படுதலின் எழுத்தெனப் படுமே" என்பது சூத்திரம்.]

**4.** தமிழ்ப் பாஷையின் எழுத்துகள் நான்கு வகை அவை—

i. உயிரெழுத்து.
ii. மெய்யெழுத்து.
iii. உயிர்மெய் யெழுத்து.
iv. ஆய்த வெழுத்து.

என்பவை.

### i. உயிரெழுத்து.

**5.** உயிரெழுத்துப் பன்னிரண்டு. அவை—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன.

[வேறு எழுத்துகளின் உதவியின்றித் தாமே ஒலித்தற்குரிய எழுத்துகள் உயிரெழுத்துகளாம்.]

**6.** உயிரெழுத்து, குறில் நெடில் என இருவகை.

**7.** குறிலாவது, குறுகிய ஓசையை உடைய எழுத்து. அவை—அ, இ, உ, எ, ஒ என்பன.

[ஆ, ஈ முதலியவற்றைவிட அ, இ முதலியவை குறுகிய ஓசை உடையனவாய் இருத்தலைக் கவனிக்க.]

(இவை குற்றெழுத்து என்றுங் கூறப்படும்.)

**8.** நெடிலாவது நீண்ட ஓசையை உடைய எழுத்து. அவை—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பன.

[அ, இ முதலியவற்றைவிட ஆ, ஈ முதலியவை நீண்ட ஓசை உடையனவாய் இருத்தலைக் கவனிக்க.]

(இவை நெட்டெழுத்து என்றும் கூறப்படும்.)

**9.** அ, இ, உ, என்னும் மூன்றும் சொல்லுக்கு முதலில் நின்று ஒரு பொருளைச் சுட்டிக்காட்டும் பொருளில் வந்தால் சுட்டெழுத்து எனப்படும்.

(உதாரணம்.) அவன்—அம்மனிதன்.
இவன்—இப்பலகை.
உவன்—உவ்வீடு.

[சுட்டிக் காட்டுதல்—குறித்துக் காட்டுதல். உ என்னுஞ் சுட்டெழுத்துப் பாட்டில் மாத்திரமே வரும்.]

**10.** இம் மூன்று சுட்டெழுத்துகளும் அந்த, இந்த, உந்த, எனத் திரிந்து வருதலும் உண்டு.

(உ–ம்.) அந்த மனிதன், இந்த மனிதன், உந்த மனிதன்.

**11.** ஆ, எ, ஏ, ஓ, யா என்னும் ஐந்தெழுத்துகளும் வினைப் பொருளை உணர்த்திவரின் வினைவெழுத்து எனப்படும்.

**12.** இவற்றுள், எ யா என்னும் இரண்டும் சொல்லுக்கு முதலில் மாத்திரம் நின்று வினைப்பொருளை உணர்த்தும்.

(உ–ம்.) எவன்—யாவன்.
எம்மனிதன்—யாங்ஙனம்.

[எ என்னும் வினை எழுத்து எந்த எனத் திரிந்தும் வரும்.]

**13.** ஆ ஓ என்னும் இரண்டும், சொல்லுக்கு ஈற்றில் மாத்திரம் நின்று வினைப்பொருளை உணர்த்தும்.

(உ–ம்.) அவனா, அவனோ.
வந்தானா, வந்தானோ.

**14.** ஏ என்பது, சொல்லுக்கு இரண்டிடத்திலும் நின்று வினைப்பொருளை உணர்த்தும்.

(உ–ம்.) ஏவன், அவனே.

[ஏ என்பது வினை எழுத்தாய்ப் பாட்டில் மாத்திரமே வரும்.]

## ii. மெய்யெழுத்து.

**15.** மெய்யெழுத்துப் பதினெட்டு—அவை, க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பன.

இவை உயிரெழுத்துகளின் உதவியின்றி இயங்கமாட்டா. ஆதலின் மெய்யெழுத் தெனப்பட்டன.

**16.** இம் மெய்யெழுத்துகள் **வல்லினம்**, **மெல்லினம்**, **இடையினம்** என மூன்று வகைப்படும்.

**17.** அவற்றுள், **வல்லின**மாவன—வலிந்த ஓசையை உடைய மெய்யெழுத்துகள். அவை—க், ச், ட், த், ப், ற் என்பன. (இவை வன்கணம், வல்லெழுத்து, வன்மை என்றும் சொல்லப்படும்.)

**18.** **மெல்லின**மாவன—மெலிந்த ஓசையை உடைய மெய்யெழுத்துகள். அவை—ங், ஞ், ண், ந், ம், ன் என்பன. (இவை மென்கணம், மெல்லெழுத்து, மென்மை என்றும் சொல்லப்படும்.)

**19.** **இடையின**மாவன—வல்லினத்திற்கும், மெல்லினத்திற்கும் இடைத்தரமான ஓசையை உடைய மெய்யெழுத்துகள். அவை—ய், ர், ல், வ், ழ், ள் என்பன. (இவை இடைக்கணம், இடையெழுத்து, இடைமை என்றும் சொல்லப்படும்.)

## iii. உயிர்மெய்யெழுத்து.

**20.** உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து உயிர்மெய்யெழுத்தாம். உயிர்மெய் யெழுத்து 216.

[குறிப்பு—ஒரு மெய்யெழுத்தினோடு பன்னிரண்டு உயிரெழுத்துகளும் தனித் தனியே கூடுவதனால், பன்னிரண்டு உயிர்மெய் யெழுத்துகள் உண்டாகின்றன. அவ்வாறே, 18 மெய்களோடும் தனித்தனியே பன்னிரண்டு உயிர்களுங் கூடுவதனால் $18 \times 12 = 216$ உயிர்மெய் யெழுத்துகள் உண்டாகின்றன.]

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| க் + அ = க | க் + உ = கு | க் + ஐ = கை |
| க் + ஆ = கா | க் + ஊ = கூ | க் + ஒ = கொ |
| க் + இ = கி | க் + எ = கெ | க் + ஓ = கோ |
| க் + ஈ = கீ | க் + ஏ = கே | க் + ஔ = கௌ |

எல்லா உயிர்மெய்யெழுத்துகளையும் அடுத்த பக்கத்திற் காண்க.

## உயிர்மெய்யெழுத்துகள் இருநூற்றுப் பதினாறு.

| மெய். | | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | + | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ. |
| ங் | + | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ. |
| ச் | + | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ. |
| ஞ் | + | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ. |
| ட் | + | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ. |
| ண் | + | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ. |
| த் | + | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ. |
| ந் | + | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ. |
| ப் | + | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ. |
| ம் | + | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ. |
| ய் | + | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ. |
| ர் | + | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ. |
| ல் | + | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ. |
| வ் | + | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ. |
| ழ் | + | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ. |
| ள் | + | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ. |
| ற் | + | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ. |
| ன் | + | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ. |

உயிர்க் குற்றெழுத்துகள்—5 ஆகையால்,
உயிர்மெய்க் குற்றெழுத்துகள்—(18 × 5) = 90.

| அ | இ | உ | எ | ஒ |
|---|---|---|---|---|
| க | கி | கு | கெ | கொ. |
| ங | ஙி | ஙு | ஙெ | ஙொ. |
| ச | சி | சு | செ | சொ. |
| ஞ | ஞி | ஞு | ஞெ | ஞொ. |
| ட | டி | டு | டெ | டொ. |
| ண | ணி | ணு | ணெ | ணொ. |
| த | தி | து | தெ | தொ |
| ந | நி | நு | நெ | நொ. |
| ப | பி | பு | பெ | பொ. |
| ம | மி | மு | மெ | மொ. |
| ய | யி | யு | யெ | யொ. |
| ர | ரி | ரு | ரெ | ரொ. |
| ல | லி | லு | லெ | லொ. |
| வ | வி | வு | வெ | வொ. |
| ழ | ழி | ழு | ழெ | ழொ. |
| ள | ளி | ளு | ளெ | ளொ. |
| ற | றி | று | றெ | றொ. |
| ன | னி | னு | னெ | னொ. |

உயிர் நெட்டெழுத்துகள்—7 ஆகையால்,
உயிர்மெய் நெட்டெழுத்துகள்—(18 × 7) = 126.

| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ. |
|---|---|---|---|---|---|---|
| கா | கீ | கூ | கே | கை | கோ | கௌ. |
| ஙா | ஙீ | ஙூ | ஙே | ஙை | ஙோ | ஙௌ. |
| சா | சீ | சூ | சே | சை | சோ | சௌ. |
| ஞா | ஞீ | ஞூ | ஞே | ஞை | ஞோ | ஞௌ. |
| டா | டீ | டூ | டே | டை | டோ | டௌ. |
| ணா | ணீ | ணூ | ணே | ணை | ணோ | ணௌ. |
| தா | தீ | தூ | தே | தை | தோ | தௌ. |
| நா | நீ | நூ | நே | நை | நோ | நௌ. |
| பா | பீ | பூ | பே | பை | போ | பௌ. |
| மா | மீ | மூ | மே | மை | மோ | மௌ. |
| யா | யீ | யூ | யே | யை | யோ | யௌ. |
| ரா | ரீ | ரூ | ரே | ரை | ரோ | ரௌ. |
| லா | லீ | லூ | லே | லை | லோ | லௌ. |
| வா | வீ | வூ | வே | வை | வோ | வௌ. |
| ழா | ழீ | ழூ | ழே | ழை | ழோ | ழௌ. |
| ளா | ளீ | ளூ | ளே | ளை | ளோ | ளௌ. |
| றா | றீ | றூ | றே | றை | றோ | றௌ. |
| னா | னீ | னூ | னே | னை | னோ | னௌ. |

## iv. ஆய்தவெழுத்து.

**21.** ஆய்தவெழுத்தாவது, மூன்று புள்ளி வடிவினதாய்க் குற்றெழுத்துக்குப் பின்னும் உயிரெழுத்தோடு கூடிய வல்லெழுத்துச்கு முன்னும் வரும் ஓர் எழுத்து.

(உ-ம்.) எஃகு, அஃது, இருபஃது, அஃறிணை, அஃகான்.

## v. இனவெழுத்து.

**22.** எழுத்துகளுள், பிறப்பு அளவு முதலியவற்றால் ஒன்றுக்கொன்று சம்பந்தமான எழுத்துகள் உண்டு. அவை இனவெழுத்து என்று சொல்லப்படும்.

**23.** உயிரெழுத்துகளுள், குற்றெழுத்துகள் ஐந்தினுக்கும் நெட்டெழுத்துகள் ஐந்தும் இனமாம். குற்றெழுத்துகள் இல்லாத ஐகார ஔகாரங்களுக்கு முறையே இகர உகரங்கள் இனமாம்.

| | | | |
|---|---|---|---|
| அ—ஆ | இ—ஈ | உ—ஊ | எ—ஏ |
| (இ)—ஐ | ஒ—ஓ | (உ)—ஔ | |

[இவ்வறைகளில் உள்ள இரண்டிரண்டு உயிரெழுத்துகளில் ஒன்று மற்றொன்றுக்கு இனமாம் என்று கொள்க.]

**24.** மெய்யெழுத்துகளுள் வல்லெழுத்துகள் ஆறினுக்கும் மெல்லெழுத்துகள் ஆறும் முறையே இனமாம். இடை எழுத்துகள் ஆறினுக்கும் வேறு இன எழுத்துகள் இல்லாமையால் அவை ஆறும் ஓர் இனம் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| க—ங | ச—ஞ | ட—ண | த—ந |
| ப—ம | ற—ன | | |

[இவ்வறைகளில் உள்ள இரண்டிரண்டு மெய்யெழுத்துகளில் ஒன்று மற்றொன்றுக்கு இனவெழுத்தாம் என்றுகொள்க.]

| |
|---|
| ய, ர, ல, வ, ழ, ள. |

[இவ்வறையில் உள்ள எழுத்துகள் ஆறும் ஓரினம்]

## vii. மாத்திரை.

**25.** ஒவ்வோர் எழுத்தையும் உச்சரிப்பதற்குரிய கால அளவு உண்டு. அந்த அளவுக்கு **மாத்திரை** என்று பெயர் வழங்கும்.

கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதுமே ஒரு மாத்திரையின் கால அளவாம்

**26.** உயிர்க் குற்றெழுத்துக்கு மாத்திரை—**ஒன்று**. உயிர் நெட்டெழுத்துக்கு மாத்திரை—**இரண்டு**. மெய்யெழுத்திற்கும் ஆய்த எழுத்துக்கும் தனித்தனி மாத்திரை—அரை.

**27.** உயிர்மெய்க்கு அதன்மேல் ஏறிய உயிரின் மாத்திரையே மாத்திரையாம்; உயிர் ஏறிய மெய்க்குத் தனியாக மாத்திரை இல்லை. எனவே, உயிர் மெய்க் குற்றெழுத்திற்கு ஒரு மாத்திரை எனவும், உயிர்மெய் நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரை எனவுங் கொள்ளவேண்டும்.

**28.** குற்றெழுத்தாகிய உகரம் சிலவிடங்களில் தனக்குரிய அரைமாத்திரையிற் குறைந்துவருதல் உண்டு. அங்ஙனம் வரும் உகரத்திற்குக் குற்றியலுகரம் என்று பெயர் வழங்கும். குற்றியலுகரம் கு, சு, டு, து, பு, று என வல்லினமெய் ஆறின்மேலும் ஏறி, தனிக்குறில் ஒழிந்த மற்றைய எழுத்துக்களின்பின் ஒரு மொழிக்கு ஈறாய் வரும்.

(உ–ம்.) எஃகு, அரசு, பட்டு, பந்து, மார்பு, ஆறு.

['கதவு' என்பதில் உகரம் வல்லினமெய்யின்மீது ஏறியதன்று. ஆதலால் வு என்பதின்மீது ஏறியுள்ள உகரம் குற்றியலுகர மாகாது. 'பசு' என்பதில் சு என்பதின்மீது ஏறியுள்ள உகரம் தனிக்குறிலைச் சார்ந்துவந்ததால் இதுவும் குற்றியலுகரமாகாது.]

## II. சொல்லியல்.

### i. சொல்.

**29.** எழுத்துகள், தனித்தேனும், இரண்டு முதலாகத் தொடர்ந்தேனும், ஒரு பொருளைத் தெரிவித்தால், **சொல்** எனப் படும்.

(உ-ம்.) கை, பூ, வா, போ — ஓரெழுத்தாலான சொற்கள். குரு, படம், வந்தான்—பல எழுத்துகள் தொடர்ந்தான சொற்கள்.

[சொல், பதம், மொழி—என்பன ஒரே பொருளன.]

**30.** சொல்லில் திணை, பால், எண், இடம் என்னும் நான்கையும் அறிதல் வேண்டும்.

#### திணை.

**31. திணை** என்பது ஜாதி. அது உயர்திணை அஃறிணை என இருவகையாம்.

[உயர்திணை—உயர்வாகிய ஜாதி. அஃறிணை—(உயர்வு) அல்லாத (அதாவது தாழ்வாகிய) ஜாதி.]

**32.** மக்களும், தேவரும், நரகரும் உயர்திணைப் பொருள்களாவர். மற்ற உயிருள்ளனவும் உயிரில்லாதன வும் ஆகிய எல்லாப் பொருள்களும் அஃறிணைப் பொருள் களாம்.

#### பால்.

**33.** பால் என்பது பகுப்பு. அது ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகை யாம்.

**34.** பால்கள் ஐந்தனுள், ஆண்பால், பெண்பால், பலர் பால் என்னும் மூன்றும் உயர்திணைக் குரியனவாம். ஒன்றன் பால், பலவின்பால் என்னும் இரண்டும் அஃறிணைக் குரி யனவாம்.

[உயர்திணைப் பொருள்களுள் ஆடவருள் ஒருவராயின் ஆண்பால் எனவும், பெண்டிருள் ஒருவராயின் பெண்பால் எனவும், ஆடவரேனும் பெண்டிரேனும் அவ்விருவருங் கலந்தேனும், ஒருவரின் மிக்கவராயின்

பலர்பால் எனவும், அஃறிணைப் பொருள்களுள் ஒரு பொருளாயின் ஒன்றன்பால் எனவும், ஒன்றின் மிக்க பொருளாயின் பலவின்பால் எனவுங் கொள்க.]

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | ராமன் | — ஆண்பால். | உயர்திணை. | |
| | சீதை | — பெண்பால். | | |
| | ஆடவர் | பலர்பால். | | |
| | பெண்டிர் | | | |
| | நல்லோர்கள் | | | |
| | கோட்டது | — ஒன்றன்பால். | அஃறிணை. | |
| | கோட்டன | — பலவின்பால். | | |

**35.** அஃறிணையிலும், உயிருள்ளவற்றுட் பலவற்றில், ஆண்பாற் பொருளைக் காட்டும் களிறு ஏறு சேவல் என்னும் இவை முதலிய சொற்களும், பெண்பாற் பொருள்களைக் காட்டும் பிடி பெட்டை என்னும் இவை முதலிய சொற்களும் உண்டு. ஆயினும், அஃறிணையில் உயிருள்ளன பலவற்றில் அப் பிரிவு விளக்கமாய்த் தெரியாமையாலும், உயிரில்லாதனவற்றுள் அப் பிரிவு இல்லாமையாலும், அஃறிணை அனைத்திற்கும் ஆண்பால் பெண்பால் என்னும் பகுப்புக் கூறப்படவில்லை.

## எண்.

**36.** எண் என்பது எண்ணிக்கை. ஒரு பொருளைக் குறிக்குஞ் சொல் ஒருமை எனவும், ஒன்றின்மிக்க பொருளைக் குறிக்குஞ் சொல் பன்மை எனவுங் கூறப்படும்.

**37.** ஐந்து பால்களுள் ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் என்னும் மூன்று பால்களும், ஒருமை எண்ணுக் குரியன. பலர்பால் பலவின்பால் என்னும் இரண்டும் பன்மை எண்ணுக் குரியன.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | தம்பி வந்தான் | — ஆண்பால். | ஒருமை. |
| | தங்கை வந்தாள் | — பெண்பால். | |
| | அது வந்தது | — ஒன்றன்பால். | |
| | மனிதர்கள் வந்தார்கள் | — பலர்பால். | பன்மை. |
| | மரங்கள் வளர்ந்தன | — பலவின்பால். | |

## இடம்.

**38.** இடமாவது சொற்கள் வழங்குதற் குரிய தானம் அது தன்மை முன்னிலை படர்க்கை என மூன்று வகையாம்.

**39.** அவற்றுள், தன்மையிடம் பேசுவோர்; முன்னிலை இடம் முன்னின்று கேட்போர்; படர்க்கையிடம் அவர்களாற் பேசப்படும் மற்றை எல்லாப் பொருள்களுமாம்.

[அவற்றுள் படர்க்கையிடத்தில் இருதிணைகளும் ஐம்பால்களும் தோன்றும். தன்மையிடத்திலும் முன்னிலையிடத்திலும் இருதிணை ஐம்பால்கள் தோன்ற. அவற்றிற்குப் பதில் ஒருமை பன்மை என்னும் எண்கள் தோன்றும்.]

1. (தன்மை.)

| | |
|---|---|
| நான் வந்தேன் | ஒருமை. |
| யான் ,, | |
| நாம் வந்தோம் | பன்மை. |
| யாம் ,, | |
| நாங்கள் ,, | |
| யாங்கள் ,, | |

2. (முன்னிலை.)

| | |
|---|---|
| நீ வந்தாய் | ஒருமை. |
| நீர் வந்தீர் | பன்மை. |
| நீங்கள் வந்தீர்கள் | |

3. படர்க்கை.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | கண்ணன் வந்தான் | ஆண்பால். | உயர்திணை. |
| | பொன்னி வந்தாள் | பெண்பால். | |
| | மனிதர்கள் வந்தார்கள் | பலர்பால். | |
| | அது வந்தது | ஒன்றன்பால். | அஃறிணை. |
| | அவை வந்தன | பலவின்பால். | |

**40.** தமிழ்ச்சொற்கள் (1) பெயர் (2) வினை (3) இடை (4) உரி—என நான்கு வகைப்படும்.

## ii. பெயர்.

**41.** பெயர்ச்சொல்லாவது, பொருள், இடம், காலம், முதலியவற்றை உணர்த்தும் சொல்லாம்.

**42.** அது பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என அறுவகையாம்.

**43.** அவற்றுள் பொருளுக்குப் பெயராய் வருவது பொருட்பெயர்.

(உ-ம்.) மனிதன், பசு, கிளி, மரம், மண், கல், நீர், நெருப்பு, காற்று-என வரும் இவை முதலியன.

**44.** இடத்துக்குப் பெயராய் வருவது இடப்பெயர்.

(உ-ம்) வானம், பூமி, கண்டம், தேசம், ஊர், நாடு, பட்டினம், மேல், கீழ், பக்கம்-என வரும் இவை முதலியன.

**45.** காலத்துக்குப் பெயராய் வருவது காலப்பெயர்.

(உ-ம்.) வருஷம், ஆடி, ஞாயிறு, மணி, நாழிகை, நிமிஷம், விநாடி—என வரும் இவை முதலியன.

**46.** சினைக்கு (= உறுப்புக்கு)ப் பெயராய் வருவது சினைப்பெயர்.

(உ-ம்.) கண், கை, கால், கொம்பு, வால், இறகு, வேர், இலை, பூ, காய், கனி—என வரும் இவை முதலியன.

**47.** குணத்துக்குப் பெயராய் வருவது குணப்பெயர்.

(உ-ம்.) கருமை வெண்மை, நன்மை, தீமை, அன்பு, அழகு, தண்மை, வெண்மை—என வரும் இவை முதலியன.

**48.** தொழிலுக்குப் பெயராய் வருவது தொழிற்பெயர்.

(உ.-ம்.) நடத்தல், உண்ணல், படித்தல், வருகை, ஓட்டம், தேர்ச்சி—என வரும் இவை முதலியன.

**49.** பெயர்ச்சொல், திணைவகையினால் உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் என இரண்டு வகையாம்.

(உ-ம்.) தம்பி, தங்கை, மனிதர், — உயர்திணை.
மாடு, கிளி, மரங்கள், — அஃறிணை.

**50.** பால் வகையால், ஆண்பாற்பெயர், பெண்பாற் பெயர், பலர்பாற் பெயர், ஒன்றன்பாற் பெயர், பலவின்பாற் பெயர் என ஐந்து வகையாம்.

**51.** ஆண்பாலைக் காட்டும் விகுதிகள் — **அன், ஆன், மன், மான், ன்** என்பனவாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ–ம்.) | பொன்னன் | — அன். | விகுதி. |
| | குழையான் | — ஆன். | ,, |
| | வடமன் | — மன். | ,, |
| | கோமான் | — மான். | ,, |
| | பிறன் | — ன். | ,, |

**52.** பெண்பாலைக் காட்டும் விகுதிகள் — **அள், ஆள், ள், இ** என்பனவாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ–ம்.) | குழையள் | — அள். | விகுதி. |
| | குழையாள் | — ஆள். | ,, |
| | மகள் | — ள். | ,, |
| | பொன்னி | — இ. | ,, |

**53.** பலர்பாலைக் காட்டும் விகுதிகள் — **அர், ஆர், மார், ர், கள்** என்பனவாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ–ம்.) | குழையர் | — அர் | விகுதி. |
| | குழையார் | — ஆர் | ,, |
| | தேவிமார் | — மார் | ,, |
| | பிறர் | — ர் | ,, |
| | குருக்கள் | — கள் | ,, |

**54.** ஒன்றன்பாலைக் காட்டும் விகுதி **து** என்பதாம்.

(உ–ம்.) குழையது, அது } து. விகுதி.

**55.** பலவின் பாலைக்காட்டும் விகுதிகள் — **வை, அ, வ், கள்** என்பனவாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ–ம்.) | குழையவை. அவை. | — வை | — விகுதி. |
| | குழையன. | — அ | — ,, |
| | அவ் | — வ் | — ,, |
| | குதிரைகள் | — கள் | — ,, |

**56.** இ என்னும் விகுதி, உயர்திணை—ஆண்பால் பெண் பால்களிலும், அஃறிணை ஒன்றன் பாலிலும் வரும்.

(உ–ம்.) வில்லி —ஆண்பால்.
குமரி —பெண்பால்.
நாற்காலி—ஒன்றன்பால்.

**57.** இடவகையினுற் பெயர்கள் தன்மைப் பேயர், முன் னிலைப்பெயர், படர்க்கைப் பேயர் என மூன்று வகையாம்.

**58.** அவற்றுள், தன்மைப் பெயர், தன்மை ஒருமைப் பேயர் தன்மைப் பன்மைப் பேயர் என இரண்டு வகையாம்.

(உ–ம்.) நான். யான். } தன்மை ஒருமைப்பெயர்.

நாம். யாம். நாங்கள். யாங்கள். } தன்மைப் பன்மைப்பெயர்.

**59.** முன்னிலைப் பெயரும், முன்னிலை ஒருமைப் பேயர் முன்னிலைப் பன்மைப் பேயர் என இரண்டு வகையாம்.

(உ–ம்.) நீ—முன்னிலை ஒருமைப்பெயர்.

நீர். நீயிர். நீவிர். நீங்கள். } முன்னிலைப் பன்மைப்பெயர்.

**60.** படர்க்கைப் பெயர்கள் முற்கூறிய ஆண்பாற் பெயர் முதலிய ஐந்துமாம்.

(உ–ம்.) அவன் — ஆண்பால்.
அவள் — பெண்பால்.
அவர் — பலர்பால்.
அது — ஒன்றன்பால்.
அவை — பலவின்பால்.

**61.** எண்வகையால் பெயர்கள் ஒருமைப்பெயர் பன்மைப் பெயர் என இரண்டு வகையாம்.

(உ—ம்.) நான். மனிதன். } ஒருமைப் பெயர்.

மாந்தர். மரங்கள். } பன்மைப் பெயர்.

**62.** பெயர்ச் சொற்களில், சுட்டுப் பெயர், வினுப் பெயர், வினையாலணையும் பெயர், எண்ணினடியாகப்பிறந்த பெயர், பொதுப்பெயர் என்னும் இவைமுதலிய வேறு சில பிரிவுகளும் உண்டு.

**63.** அவற்றுள், சுட்டுப்பெயராவது சுட்டுப்பொருளை உணர்த்துஞ் சுட்டிடைச் சொற்களைப் பகுதியாகப் பெற்று வரும் பெயர்.

(உ—ம்.) அவன். இவன் உவன். } இவற்றுள், அ, இ, உ, என்னும் சுட்டி டைச் சொற்கள் பகுதியாக வந்தமை அறிக.

[இம் மூன்றும் எழுத்தின் பிரிவுகளைக் கூறுமிடத்துச் சுட்டெழுத்தென்று கூறப்பட்டன வேனும் சுட்டிக்காட்டும் பொருளை உணர்த்தலின் சொல் என்று கூறப்பட்டன எனவும், இடைச் சொல்லுக்குரிய இலக்கணம் பெற்று நிற்றலின் இடைச்சொல் எனப்பட்டன எனவும் கொள்க. இங் ஙனமே பிற்கூறப்படும் வினு இடைச் சொற்களையும் கொள்க.]

**64.** வினுப் பெயராவது வினு இடைச் சொற்கள் ஐந்த னுள், எ யா என்னும் இவ் விரண்டு வினு இடைச் சொற்களைப் பகுதியாகப் பெற்றுவரும் பெயர்.

(உ—ம்.) எவன், யாவன்.—இவற்றுள், எ யா என்னும் வினு இடைச்சொற்கள் பகுதியாக வந்தமை அறிக.

**65.** வினையாலணையும் பெயராவது வினைமுற்றுனது பெ யர்ச்சொற்களைப் போலப் பொருளை உணர்த்தி, வேற்றுமை உருபுகளை ஏற்று, திரிந்தும் திரியாமலும் வருவது.

(உ—ம்.) வந்தவன் ராமன்.
வந்தானைக் கண்டேன்.

[இவ்விரு தொடர்மொழிகளுள் முன்னதில் வந்தான் என்னும் வினைமுற்று வந்தவன் எனத் திரிந்து நின்று எழுவாய் வேற்றுமையை ஏற்றுவந்த தென வும், பின்னதில் அது திரியாமல் நின்று இரண்டாம் வேற்றுமையை ஏற்று வந்ததெனவும் அறிக.]

**66.** எண்ணினடியாகப் பிறந்த பெயராவது ஒன்று இரண்டு முதலிய எண்களைப் பகுதியாகப் பெற்று வரும் பெயர்.

(உ–ம்.) ஒருவன்.
ஒருத்தி.
இருவர்.
மூவர்.

ஆண்பாற் பெயரும் பெண்பாற் பெயரும் எண்ணினடியாகப் பிறக்கும்போது, ஒன்று என்னும் எண்ணினடியாகப் பிறக்கும். இரண்டு முதலிய எண்களின் அடியாகப் பிறவா.

(உ–ம்.) ஒருவன்.
ஒருத்தி.

[ஆண்பாலும் பெண்பாலும் ஒருமை எண்ணுக்குரியன வாகையாலும், இரண்டு முதலிய எண்கள் பன்மை எண்கள் ஆகையாலும், அவ் விருபாற் பெயர்களும் இரண்டு முதலிய எண்களின் அடியாகப் பிறவா என்றறிக.]

**67.** பொதுப்பெயர்களானவை, திணைப் பொதுப்பெயர், பாற் பொதுப்பெயர், இடப் பொதுப்பெயர் என மூவகையாம்.

**68.** அவற்றுள், திணைப் பொதுப்பெயர்களாவன உயர்திணை அஃறிணை என்னும் இருதிணைக்கும் பொதுவாய் வரும் பெயர்கள்.

தந்தை தாய் ஆண் பெண் தான் தாம் தாங்கள் முதலிய படர்க்கைப் பெயர்களும், தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர்களும், இருதிணைக்கும் பொதுவான பெயர்கள்.

| | (உயர்திணை) | (அஃறிணை) | |
|---|---|---|---|
| (உ–ம்.) | தந்தை இவன் | தந்தை இவ்வெருது | படர்க்கைப் பெயர்கள். |
| | தாய் இவள் | தாய் இப்பசு | |
| | ஆண் மகன் | ஆண் பன்றி | |
| | பெண் மகள் | பெண் பன்றி | |
| | அவன் தான் | அது தான் | |
| | அவர் தாம் | அவை தாம் | |
| | அவர்கள் தாங்கள் | அவைகள் தாங்கள் | |
| | யான் நம்பி | யான் கிளி | தன்மைப் பெயர்கள். |
| | யாம் பாணர் | யாம் கிளிகள் | |
| | கண்ணு நீ | கிளியே நீ | முன்னிலைப் பெயர்கள். |
| | மக்காள் நீவிர் | கிளிகாள் நீவிர் | |

**69.** ஒருவர் என்னும் பெயர் உயர்திணை ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும் பொதுவாய் வரும்.

(உ—ம்.) ஒருவர் வந்தார்.

[இஃது ஆடவருள் ஒருவர் எனின் ஆண்பாலையும், பெண்டிருள் ஒருவர் எனின் பெண்பாலையும் உணர்த்தும்.]

**70.** ஒன்றன்பாலுக்குரிய து விகுதியையும் பலவின் பாலுக்குரிய வை முதலிய விகுதிகளையும் பெறாத அஃறிணைப் பெயர்கள் அத் திணை இருபாலுக்கும் பொதுவாம். இவை பால்பகா அஃறிணைப்பெயர் எனப்படும்.

(உ—ம்.) சிங்கம், புலி, யானை, மரம், பொன், மணி.

**71.** எல்லாம் என்னும் பெயர், இருதிணைக்கும் மூன்றிடங்களுக்கும் பொதுவாய்ப் பன்மையில் வரும்.

(உ—ம்.) யாமெல்லாம்.
நீரெல்லாம்.
அவரெல்லாம்.
அவையெல்லாம்.

## வேற்றுமை.

**72.** வேற்றுமையாவது, இயல்பாய் நின்ற பெயர்ச்சொல் வேறொரு சொல்லோடு சேரும்போது அப்பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்தி நிற்பதாம்.

(உ—ம்.) குதிரை ஓடிற்று.

[குதிரை என்னும் பெயர்ச்சொல் ஓடிற்று என்னும் வேறொரு சொல்லோடு சேர்ந்தபோது குதிரையாகிய ஒரு பொருளை உணர்த்துதலாகிய அவ்வர்த்தத்தில் மாத்திரம் நிற்றலினின்றும் வேறுபட்டு ஓடிற்று என்னும் தொழிலுக்குக் கர்த்தாவா யிருத்தலாகிய மற்றோ ரர்த்தத்தையும் ஏற்றுக்கொண்டது. இங்ஙனம் அப் பெயர்ச்சொல்லின் பொருள் வேறுபடச்செய்வது தான் வேற்றுமையாம். ஒருமனிதன் முன்னிருந்ததினும் பருத்துத் தோன்றினும் இளைத்துத் தோன்றினும் அவன் இப்போது வேறுபட்டுக் காணப்படுகின்றான் என்பர். அங்ஙனமே, பெயர்ச்சொல் தனக்கு இயல்பாயுள்ள பொருளோடு மற்றொரு பொருளை ஏற்றுக்கொள்ளுதலே இங்கு வேறுபாடு என்று கூறப்படுவதாகும்.]

**73.** இவ் வேற்றுமை எட்டு வகைப்படும். ஒரு வேற்றுமைக்கு அறிகுறியாக வருவது, அவ் வேற்றுமைக்கு உருபாம். [உருபு = உருவு = உருவம்.]

## முதல் வேற்றுமை.

**74.** பெயரின் இயல்பே முதல் வேற்றுமை. அது எழுவாய் வேற்றுமை என்றுஞ் சொல்லப்படும். தொழிலேயும், பெயரையும், வினவையுங் கொண்டு முடிதல் அதன் பொருளாம்.

(உ-ம்.) ராமன் வந்தான் — இதில் ராமன் என்னும் எழுவாய் தொழிலேக்கொண்டு முடிந்தது.

அவன் ராமன் — இதில் அவன் என்னும் எழுவாய் பெயரைக்கொண்டு முடிந்தது.

அவன் யார்? — இதில் அவன் என்னும் எழுவாய் வினவைக்கொண்டு முடிந்தது.

## இரண்டாம் வேற்றுமை.

**75.** இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பது. இதன்பொருள் செயப்படுபொருள். அந்தச் செயப்படு பொருளானது, ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என அறுவகையாம்

(உ-ம்.) துணியை நெய்தான் — (இதில் துணி) ஆக்கப்படு பொருள்.

துணியைக் கிழித்தான் — (இதில் துணி) அழிக்கப்படு பொருள்.

வீட்டைச் சேர்ந்தான் — (இதில் வீடு) அடையப்படு பொருள்.

துணியை இழந்தான் — (இதில் துணி) நீக்கப்படு பொருள். இது துறக்கப்படு பொருள் என்றுங் கூறப் படும்.

புலியைப் போன்றான் — (இதில் புலி) ஒக்கப்படு பொருள்.

பொன்னே உடையான் — (இதில் பொன்) உடைமைப் பொருள்.

## மூன்றாம் வேற்றுமை.

**76.** மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன.

[இவ் வேற்றுமைக்குக் கொண்டு, உடன் என்பன சொல்லுருபுகளாக வரும். இவற்றுள், கொண்டு என்பது ஆல் ஆன் என்பனவற்றிற்குப் பதிலாகவும், உடன் என் பது ஒடு ஓடு என்பனவற்றிற்குப் பதிலாகவும் வரும்.]

இவ் வேற்றுமையின் பொருள், கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என்பன.

அவற்றுள், கருவிப்பொருள், முதற்கருவி துணைக்கருவி என இருவகைப்படும்.

அவற்றுள், முதற்கருவியாவது, காரியப்பொருளாகத் தானே மாறுங் காரணம்.

(உ—ம்.) 'மண்ணு ் குடத்தைச் செய்தான்.'

> இதில், மண்—காரணம், குடம்—காரியம்; அம் மண்ணு கிய காரணமே குடமாகிய காரியமாக மாறி நிற்றல் காண்க.

துணைக்கருவியாவது, அம் முதற்கருவி காரியப்பொரு ளாகும்வரையிலும் அதற்குத் துணையாக விருந்து, பிறகு அதைவிட்டு நீங்கிவிடும் காரணமாம்.

(உ—ம்.) கத்தியா ் சீவிய முளை.

> இதில் கத்தி துணைக்கருவி. அது, மரமாகிய முதற்கருவி முளையாகிய காரியப்பொருளாக மாறும் வரையிலும் அதனுடனிருந்து பிறகு நீங்கிவிடுவது அறிக.

கருத்தாப்பொருளும், இயற்றுதற் கருத்தா ஏவுதற் கருத் தா என இரண்டுவகைப்படும்.

அவற்றுள், இயற்றுதற் கருத்தாவாவது, முதற்கருவியை யும் துணைக்கருவியையும் கொண்டு காரியத்தைச் செய்வதாம்.

(உ—ம்.) தச்சனல் கோயில் கட்டப்பட்டது.

> இதில் கோயில் காரியம், அதைக் கட்டினவன் தச்சன்; ஆதலால், தச்சன் இயற்றுதற் கருத்தா.

ஏவுதற் கருத்தாவாவது அந்த இயற்றுதற் கருத்தாவின் தொழிலை உண்டாக்கும் தொழிலை உடையது.

(உ—ம்.) அரசனுல் கோயில் கட்டுவிக்கப்பட்டது.

இதில் கோயிலைக் கட்டினவன் தச்சன்; அவனைக் கோயிலைக் கட்டும்படி ஏவினவன் அரசன். ஆதலால் அரசன் ஏவுதற் கருத்தா.

உடனிகழ்ச்சிப் பொருளாவது, எழுவாய் வேற்றுமை ஏற்ற பொருளின் தொழிலைத் தன்னிடத்தும் உடன் நிகழக் கொள்ளும் பொருளாம்.

(உ—ம்.) மைந்தனுேடு தந்தை வந்தான்.

இதில் எழுவாய் வேற்றுமை ஏற்ற பொருள் தந்தை; அந்தத் தந்தை என்னும் பொருளின் தொழிலாகிய வருதலைத் தன்னிடத்தும் உடன் நிகழக் கொண்டுள்ள பொருள் மைந்தன்; ஆதலால், மைந்தன் உடனிகழ்ச்சிப்பொருள்.

## நான்காம் வேற்றுமை.

**77.** நான்காம் வேற்றுமையின் உருபு **கு** என்பது. ஆக, பொருட்டு என்பன அதன் சொல்லுருபுகள்.

இவ் வேற்றுமையின் பொருள், கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என்பன.

(உ—ம்.) ஏழைகளுக்குப் பொருளைக் கொடுத்தான் —கொடை.
பாம்புக்குப் பகை கருடன் —பகை.
கபிலருக்கு நண்பர் பரணர் —நேர்ச்சி.
விலையுயர்ந்த ஆபரணம் அரசர்க்கு உரியது —தகுதி.
கடுக்கனுக்குப் பொன் —அதுவாதல்.
கூலிக்கு வேலை செய்தான் —பொருட்டு.
கண்ணனுக்குத் தந்தை வசுதேவர் —முறை.

## ஐந்தாம் வேற்றுமை.

**78.** ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள், **இன் இல்** என்பனவாம். **நின்று**, **இருந்து**, விட்டு என்பன அவற்றின் சொல்லுருபுகள்.

இவ் வேற்றுமையின் பொருள், நீக்கப்பொருளும், ஒப்புப்பொருளும், எல்லைப்பொருளும், ஏதுப்பொருளுமாம்.

(உ-ம்.) மலையின் வீழருவி —நீக்கப்பொருள்.
காக்கையிற்கரிது களாப்பழம் —ஒப்புப்பொருள்.
மதுரையின் வடக்குச் சிதம்பரம் —எல்லைப்பொருள்.
கல்வியில் பெரியவர் கம்பர் —ஏதுப்பொருள்.

## ஆறும் வேற்றுமை.

**79.** ஆறும் வேற்றுமையின் உருபுகள், அது, ஆது, அ என்பன. **உடைய** என்பது அதன் சொல்லுருபு.

இவ் வேற்றுமையின் பொருள் உடைமைப்பொருள். அது தற்கிழமையும் பிறிதின் கிழமையும் என இரண்டு வகைப்படும். அவற்றுள், தற்கிழமை (1) பண்பு, (2) உறுப்பு, (3) ஒன்றன் கூட்டம், (4) பலவின் ஈட்டம், (5) திரிபினுக்கம் என ஐந்துவகை. அவற்றுள், பண்பு, (1) i. குணப்பண்பும், (1) ii. தொழிற்பண்பும், என இரண்டு வகைப்படும்.

பிறிதின் கிழமை, (1) பொருள் (2) இடம் (3) காலம் என மூன்று வகையாம்.

(உ-ம்.) சாத்தனது கருமை —குணப்பண்புத் தற்கிழமை.
குதிரையினது ஓட்டம் —தொழிற்பண்புத் தற்கிழமை.
குரங்கினது கை —உறுப்புத் தற்கிழமை.
மனிதரது கூட்டம் —ஒன்றன்கூட்டத் தற்கிழமை.
படைகளது தொகுதி —பலவின்ஈட்டத் தற்கிழமை.
நெல்லினது பொரி —திரிபினுக்கத் தற்கிழமை.
சாத்தனது பசு —பொருட் பிறிதின்கிழமை.
சாத்தனது வீடு —இடப் பிறிதின்கிழமை.
சாத்தனது நாள் —காலப் பிறிதின்கிழமை.

## ஏழாம் வேற்றுமை.

**80.** ஏழாம் வேற்றுமையின் உருபுகள், **கண், இல், இடத்தில்,** என்னும் இவை முதலியவாம். இதன்பொருள்: (1) பொருள், (2) இடம், (3) காலம், (4) உறுப்பு, (5) குணம், (6) தொழில் என்னும் ஆறும், தற்கிழமையிலும் பிறிதின் கிழமையிலும் இடமாய் நிற்றலாம்.

இடமானது:

(உ-ம்.) மணியில் ஒளி — தற்கிழமை. } பொருள்.
மரத்தில் கிளி — பிறிதின் கிழமை. }

| | | |
|---|---|---|
| ஊரில் வீடு | —தற்கிழமை. | இடம். |
| ஆகாயத்தில் பருந்து | —பிறிதின் கிழமை. | |
| நாளில் நாழிகை | —தற்கிழமை. | காலம். |
| சித்திரையி ் பாதிரி பூத்தது. | —பிறிதின் கிழமை. | |
| கையில் விரல் | — தற்கிழமை. | உறுப்பு. |
| விரலில் மோதிரம் | — பிறிதின் கிழமை. | |
| கறுப்பில் அழகு | —தற்கிழமை. | குணம். |
| இளமையிற் செல்வம் | —பிறிதின்கிழமை. | |
| ஆட்டத்தில் அபிநயம் | —தற்கிழமை. | தொழில். |
| ஆட்டத்தில் பாட்டு | —பிறிதின்கிழமை. | |

## எட்டாம் வேற்றுமை.

**81.** எட்டாம் வேற்றுமையின் உருபுகள்: ஈற்றில் எழுத்து மிகுதல், ஈற்றெழுத்து நீளுதல், ஈறு திரிதல், ஈறு கெடுதல், ஈற்றயல் எழுத்து நீளுதல், ஈறு கெட்டு அயல் எழுத்து நீளுதல், ஈறுகெட்டு அயல் நீண்டு ஏகாரமிகுதல், ஈற்றெழுத்தும் ஈற்றயல் எழுத்துந் திரிந்து ஏகாரமிகுதல், ஈறுகெட்டு அயல் திரிதல் முதலாயின.

இது விளிவேற்றுமை என்றும் சொல்லப்படும்.

இதன் பொருள் படர்க்கைப்பொருளை முன்னிலையாக அழைத்தல்.

| | | | |
|---|---|---|---|
| (உ—ம்.) | ஐயன் | — ஐயனே | — ஈற்றில் எழுத்து மிகுதல் |
| | தம்பி | — தம்பீ | — ஈற்றெழுத்து நீளுதல். |
| | நங்கை | — நங்காய் | — ஈறு திரிதல். |
| | மன்னன் | — மன்ன— | — ஈறு கெடுதல். |
| | மக்கள் | — மக்காள் | — ஈற்றயல் நீளுதல். |
| | கண்ணன் | — கண்ணா— | — ஈறு கெட்டு அயல் நீளுதல். |
| | ஐயன் | — ஐயா—வே | — ஈறுகெட்டு அயல் நீண்டு ஏகார மிகுதல். |
| | வாயிலான் | — வாயிலோயே | — ஈறும், ஈற்றயலுந் திரிந்து ஏகாரமிகுதல். |
| | ஐயன் | — ஐயே— | — ஈறு கெட்டு அயல் திரிதல். |

**82.** தன்மைப்பெயரும், முன்னிலைப்பெயரும், சுட்டுப் பெயரும், வினாப்பெயரும், தான் தாம் என்னும் பொதுப் பெயரும் விளிவேற்றுமை பெறமாட்டா.

**83.** தான் என்னும் படர்க்கை ஒருமைப் பொதுப்பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது, தன் எனத் திரியும்; தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பொதுப்பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது தம் எனத் திரியும்.

(உ—ம்.) தான் — தன்னை, தன்னால், தனக்கு,......................
தாம் — தம்மை, தம்மால், தமக்கு,......................

**84.** யான் என்னுந் தன்மை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது என் எனத் திரியும்.

(உ—ம்.) யான்—என்னை, என்னால், எனக்கு,......................

**85.** நான் என்னுந் தன்மை ஒருமைப்பெயர் முதல் வேற்றுமையில் மாத்திரமே வரும்; ஆதலால் அது வேற்றுமை உருபுகளை ஏற்காது.

**86.** நாம் என்னுந் தன்மைப் பன்மைப்பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது நம் எனத் திரியும்; யாம் என்னுந் தன்மைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது எம் எனத் திரியும்.

(உ—ம்.) நாம் — நம்மை, நம்மால், நமக்கு,......................
யாம் — எம்மை, எம்மால், எமக்கு,......................

**87.** நீ என்னும் முன்னிலை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது, நின், உன் எனத் திரியும்; நீர் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் நும், உம் எனத் திரியும்.

(உ—ம்.) நீ — நின்னை, நின்னால், நினக்கு,......................
உன்னை, உன்னால், உனக்கு,......................
நீர் — நும்மை, நும்மால், நுமக்கு,......................
உம்மை, உம்மால், உமக்கு,......................

**88.** மகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது அம் என்பது கெட அத்து என்னுஞ் சாரியை பெறும்.

(உ—ம்.) மரம் — மரத்தை, மரத்தால், மரத்துக்கு,............
இனம் — இனத்தை, இனத்தால், இனத்துக்கு,..........
திறம் — திறத்தை, திறத்தால், திறத்துக்கு,............

**89.** அவ், இவ், உவ் என்னும் சுட்டுப்பெயர்களும் எவ் என்னும் வினாப்பெயரும் வேற்றுமையுருபுகளை ஏற்கும்போது அற்றுச் சாரியை பெறும்.

(உ—ம்.) அவ் — அவற்றை, அவற்றால், அவற்றுக்கு,...............
இவ் — இவற்றை, இவற்றால், இவற்றுக்கு,...............
உவ் — உவற்றை, உவற்றால், உவற்றுக்கு,...............
எவ் — எவற்றை, எவற்றால், எவற்றுக்கு,................

**90.** அவை, இவை, உவை என்னுஞ் சுட்டுப் பெயர்களும் எவை என்னும் வினாப்பெயரும், கரியவை, நெடியவை முதலிய ஐகாரவீற்று அஃறிணைப் பன்மைப் பெயர்களும் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது ஈற்றில் உள்ள ஐகாரம் கெட அற்றுச் சாரியை பெறும்.

(உ—ம்.) அவை — அவற்றை, அவற்றால், அவற்றுக்கு,..........
இவை — இவற்றை, இவற்றால், இவற்றுக்கு,............
உவை — உவற்றை, உவற்றால், உவற்றுக்கு,.............
எவை — எவற்றை, எவற்றால், எவற்றுக்கு, .............
கரியவை — கரியவற்றை, கரியவற்றால், கரியவற்றுக்கு,..
நெடியவை — நெடியவற்றை, நெடியவற்றால், நெடியவற்றுக்கு,.

**91.** எல்லாம் என்பது உருபுகளை ஏற்கும்போது மகரங் கெட அற்றுச் சாரியை பெற்று, அதன்மேல் உருபுகளில் ஒன்றை ஏற்று, அதன்மேல் உம் என்பதையும் பெற்றுவரும்.

(உ—ம்.) எல்லாம் —(எல்லாம் + அற்று + ஐ + உம்.)
= எல்லாவற்றையும்.
(எல்லாம் + அற்று + ஆல் + உம்.)
= எல்லாவற்றாலும்.
(எல்லாம் + அற்று + கு + உம்.)
= எல்லாவற்றுக்கும்.

## iii. வினை.

**92.** வினைச் சொல்லாவது, வேற்றுமை ஏற்காமல், காலத்தோடு தோன்றிப் பொருளின் செயலைத் தெரிவிப்பதாம்.

(உ—ம்.) வந்தான், வருகிறான், வருவான்.

**93.** அது தெரிநிலைவினை குறிப்புவினை என இருவகைப் படும்.

### தெரிநிலை **வினை.**

**94.** அவற்றுள், தெரிநிலை வினையாவது, செயலும், காலமும் வெளிப்படையாகத் தெரிய நிற்கும் வினைச்சொல்.

(உ—ம்.) வந்தான்.

[இதில் வருதலாகிய செயலும் இறந்தகாலமும் வெளிப்படையாகத் தெரிய நிற்றல் காண்க.]

**95.** அது—தன்வினை, பிறவினை, செயப்படு பொருள் குன்றியவினை, செயப்படு பொருள் குன்றாவினை, செய்வினை, செயப்பாட்டு வினை என ஆறுவகைப்படும்.

**96.** அவற்றுள், தன்வினையாவது, தன்மை, முன்னிலை, படர்க்கைக் கர்த்தாக்கள் தாமே செய்கின்ற வினை.

(உ—ம்.) படித்தேன், படித்தாய், படித்தான்.

**97.** பிறவினையாவது, அக் கர்த்தாக்கள் பிறராற் செய்விக்கும் வினை.

(உ—ம்.) படிப்பித்தேன், படிப்பித்தாய், படிப்பித்தான்.

**98.** செயப்படுபொருள் குன்றிய வினையாவது, செயப்படு பொருள் (அதாவது கர்த்தாவின் தொழிலை ஏற்கின்ற பொருள்) இல்லாத வினை.

(உ—ம்.) நடந்தான்.

**99.** செயப்படு பொருள் குன்றா வினையாவது செயப்படு பொருள் உள்ள வினை.

(உ—ம்.) (வீட்டைக்) கட்டினான்.

**100.** செயப்படுபொருள் குன்றாவினையானது, செய்பவன், கருவி, இடம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் ஆறினையும் அறிவிக்கும். செயப்படுபொருள் குன்றிய வினையாயின் அச் செயப்படுபொருள் ஒழிந்த மற்ற ஐந்தினையும் அறிவிக்கும்.

(உ—ம்.) வனைந்தான்—இது செயப்படுபொருள் குன்றாவினை.
ஓடினான்—இது செயப்படுபொருள் குன்றிய வினை.

[இவற்றுள் வனைந்தான் என்னுஞ் செயப்படுபொருள் குன்ருவினையானது, குயவனுகிய செய்பவனையும், மண் தண்டு சக்கரம் முதலிய கருவிகளையும் முற்றமாகிய இடத்தையும், வனைதலாகிய செயலையும், இறந்தகாலத்தையும், குடமாகிய செயப்படு பொருளையும் அறிவித்தல் காண்க.

'ஓடினுன்' என்னும் செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் ஒழிந்த மற்ற ஐந்தினையும் அறிவித்தல் கண்டுகொள்க.]

**101.** செய்வினையாவது, கர்த்தாவின் தொழிலை உணர்த்தும் வினை.

(உ—ம்.) கொற்றன் (புலியைக்) கொன்ருன்.

[இதன்கண் கொன்ருன் என்பது கொற்றன் என்னுங் கர்த்தாவின் தொழிலை உணர்த்தினமை யறிக.]

[வினையைச் செய்பவன் கர்த்தா; ஆதலின், கர்த்தாவை வினைமுதல் எனவுங் கூறுவர்.]

**102.** செயப்பாட்டுவினையாவது, கர்த்தாவின் தொழிலைத் தனக்கு விசேஷணமாகப் பெற்றுச் செயப்படு பொருளின் தொழிலை உணர்த்தும் வினையாம்.

(உ—ம்.) கொற்றனுற் (புலி) கொல்லப்பட்டது.

[இதன்கண் கர்த்தாவின் வினை கொல்லுதல்; அதனை விசேஷணமாகப் பெற்ற வினை படுதல்; அது புலி என்னுஞ் செயப்படுபொருளின் வினையாதலறிக.]

**103.** இவ் வினைச்சொற்கள், உடன்பாட்டு வினை எதிர் மறை வினை என இருவகையாம்.

**104.** உடன்பாட்டு வினையாவது தொழில் நடப்பதை உணர்த்துவது.

(உ—ம்.) வந்தான்.

**105.** எதிர்மறை வினையாவது தொழில் நடவாமையை உணர்த்துவது.

(உ—ம்.) வரான்.

**106.** உடன்பாட்டுவினை, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் என்பவற்ருல் மூன்று வகையாம். எதிர்மறை வினை மூன்று காலத்திற்கும் பொதுவாய் இருக்கும்; ஆதலின், அது ஒரே வகையாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | வந்தான் | —இறந்தகாலம். | உடன்பாடு. |
| | வருகின்றான்— | நிகழ்காலம். | |
| | வருவான் | —எதிர்காலம். | |
| | வரான் | — | எதிர்மறை. |

[வந்திலன், வருகின்றிலன், வருகிலன் என எதிர்மறை வினையிலுந் தனித்தனி மூன்று காலங்கள் வருதலு முண்டு. இவற்றை உபாத்தியாயர் மாணவர்களுக்கு விளக்கவேண்டும்.]

**107.** இங்ஙனமாகிய இவ் வினைச்சொற்கள், முற்றுவினை எச்சவினை என இரண்டுவகையாம்.

**108.** அவற்றுள் முற்றுவினை யாவது, திணை, பால், இடம் என்பவற்றை விளக்கிப் பொருள் முடிந்து நிற்கும் வினை.

(உ-ம்.) படித்தான்.

**109.** முற்றுவினை (1) தன்மைவினைமுற்று (2) முன்னிலை வினைமுற்று (3) படர்க்கை வினைமுற்று (4) ஏவல் வினைமுற்று (5) வியங்கோள் வினைமுற்று என ஐந்து வகையாம்.

**110.** அவற்றுள், தன்மை வினைமுற்றாவது, தன்மைக் கர்த்தாவின் தொழிலை உணர்த்திவரும். அது, தன்மை ஒருமை வினைமுற்று தன்மைப் பன்மை வினைமுற்று என இருவகையாம்.

**111.** ஏன், என், அன், அல் என்பவை தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகளாம். அவற்றுள் அல் விகுதி எதிர் காலத்தில் மாத்திரம் வரும்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி | |
|---|---|---|---|---|
| உண்டேன் — | உண்கின்றேன் | — உண்பேன் | — ஏன் | உடன்பாடு. |
| உண்டனென்— | உண்கின்றனென் | — உண்குவென் | — என் | |
| உண்டனன் — | உண்கின்றனன் | — உண்பன் | — அன் | |
| | | — உண்பல் | — அல் | |
| உண்ணேன் — | | | —என் | எதிர்மறை. |

**112.** அம், ஆம், எம், ஏம், ஓம், என்பவை தன்மைப்பன்மை வினைமுற்று விகுதிகள்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி | |
|---|---|---|---|---|
| உண்டனம் — | உண்கின்றனம் — | உண்பம் — | அம் | உடன்பாடு. |
| உண்டாம் — | உண்கின்றாம் — | உண்பாம் — | ஆம் | |
| உண்டனெம் — | உண்கின்றனெம் — | உண்பெம் — | எம் | |
| உண்டேம் — | உண்கின்றேம் — | உண்பேம் — | எம் | |
| உண்டோம் — | உண்கின்றோம் — | உண்போம் — | ஓம் | |
| | உண்ணாம் | | —ஆம் | எதிர்மறை. |
| | உண்ணோம் | | —ஓம் | |

**113.** முன்னிலை வினைமுற்றாவது, முன்னிலைக் கர்த்தாவின் தொழிலை உணர்த்திவரும் வினைமுற்று. அதுவும், முன்னிலை ஒருமை வினைமுற்று, முன்னிலைப் பன்மை வினைமுற்று என இருவகையாம்.

**114.** ஐ, ஆய், இ என்பவை முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள். அவற்றுள் இகர விகுதி தானே எதிர்காலத்தைக் காட்டும்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி | |
|---|---|---|---|---|
| உண்டனை — | உண்கின்றனை — | உண்பை — | ஐ | |
| உண்டாய் — | உண்கின்றாய் — | உண்பாய் — | ஆய் | உடன்பாடு. |
| சென்றி — | செல்லாநின்றி — | சேறி — | இ | |
| | உண்ணாய் | | —ஆய் | எதிர்மறை. |

**115.** இர், ஈர் என்பவை முன்னிலைப்பன்மை வினைமுற்று விகுதிகள்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி | |
|---|---|---|---|---|
| உண்டனிர் — | உண்கின்றனிர் — | உண்பிர் — | இர் | உடன்பாடு. |
| உண்டீர் — | உண்கின்றீர் — | உண்பீர் — | ஈர் | |
| | உண்ணீர்— | | ஈர் | எதிர்மறை. |

**116.** படர்க்கை வினைமுற்றாவது, படர்க்கைக் கர்த்தாவின் தொழிலை உணர்த்தும் வினைமுற்று. அது, படர்க்கை ஆண்பால் வினைமுற்று, படர்க்கைப் பெண்பால் வினைமுற்று, படர்க்கைப் பலர்பால் வினைமுற்று, படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று, படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று என ஐந்து வகையாம்.

**117.** அன், ஆன் என்பவை படர்க்கை ஆண்பால் வினை முற்று விகுதிகள்.

அள், ஆள் என்பவை படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதிகள்.

அர், ஆர் என்பவை படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதிகள்.

இம் மூன்று பால்களும் உயர்திணைக்கு உரியவை.

| (உ–ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி. | | |
|---|---|---|---|---|---|
| படித்தனன் | —படிக்கின்றனன் | —படிப்பன் | —அன் | ஆண் பால். | உடன்பாடு |
| படித்தான் | —படிக்கின்றான் | —படிப்பான் | —ஆன் | | |
| படித்தனள் | —படிக்கின்றனள் | —படிப்பள் | —அள் | பெண் பால். | |
| படித்தாள் | —படிக்கின்றாள் | —படிப்பாள் | —ஆள் | | |
| படித்தனர் | —படிக்கின்றனர் | —படிப்பர் | —அர் | பலர் பால். | |
| படித்தார் | —படிக்கின்றார் | —படிப்பார் | —ஆர் | | |

| ஆண்பால்—விகுதி. | பெண்பால்—விகுதி. | பலர்பால்—விகுதி. | எதிர் மறை |
|---|---|---|---|
| படியான்—ஆன். | படியாள்—ஆள். | படியார்—ஆர். | |

**118.** **து**, **று** என்பவை படர்க்கை ஒன்றன்பால் வினை முற்று விகுதிகள். இவற்றுள் **று** என்பது இறந்த காலத்தில் மட்டுமே வரும்.

அ என்பது படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று விகுதி. இவ்விரண்டு பால்களும் அஃறிணைக்கு உரியவை.

| (உ–ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி | | |
|---|---|---|---|---|---|
| நடந்தது | — நடக்கின்றது | — நடப்பது | — து | ஒன்றன் பால். | உடன்பாடு |
| போயிற்று | | | — று | | |
| நடந்தன | — நடக்கின்றன | — நடப்பன | — அ | பலவின் பால். | |

எதிர்மறை ஒன்றன்பால் வினைமுற்று எதிர்மறை உணர்த்தும் ஆகாரவிகுதியோடு துகரவிகுதி பெற்றும், பலவின்பால் வினைமுற்று ஆகாரவிகுதி பெற்றும் வரும்.

(உ–ம்.) நடவாது — ஆ, து, விகுதி. (ஒன்றன்பால்)
நடவா — ஆ ,, (பலவின்பால்)

**119.** ஏவல் வினைமுற்றாவது, முன்னிலைக் கர்த்தாவை இதுசெய் என ஏவும் வினைமுற்று. அது எதிர்காலத்தில்மாத்

திரம் வரும். அதுவும், ஏவல் ஒருமை வினைமுற்று, ஏவற் பன்மை வினைமுற்று என இருவகையாம்.

**120.** ஆய், இ, அல், ஏல், ஆல் என்பவை ஏவல் ஒருமை வினைமுற்று விகுதிகள். இவற்றுள், அல், ஏல், ஆல் என்பவை எதிர்மறையில் வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | உண்ணாய் | — ஆய் | விகுதி. | உடன்பாடு. |
| | உண்ணுதி | — இ | ,, | |
| | உண்ணல் | — அல் | ,, | எதிர்மறை. |
| | உண்ணேல் | — ஏல் | ,, | |
| | மருல் | — ஆல் | ,, | |

**121.** உடன்பாட்டு ஏவல் ஒருமை வினைமுற்று, விகுதி குன்றி வருதலும் உண்டு.

(உ-ம்.) உண், படி, பார், நட, செய்.

**122.** மின், உம், ஈர் என்பவை ஏவற் பன்மைவினைமுற்று விகுதிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | உண்மின் | — மின் | விகுதி | உடன்பாடு. |
| | உண்ணும் | — உம் | ,, | |
| | உண்ணீர் | — ஈர் | ,, | |
| | உண்ணன்மின் | — மின் | ,, | — எதிர்மறை. |

**123.** வியங்கோள் வினைமுற்றாவது, இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்குப் பொதுவாய் வரும் வினைமுற்று.

**124.** க, இய, இயர், இ, அ என்பவை வியங்கோள் வினைமுற்று விகுதிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | வாழ்க | — க | விகுதி | உடன்பாடு. |
| | வாழிய | — இய | ,, | |
| | வாழியர் | — இயர் | ,, | |
| | வாழி | — இ | ,, | |
| | வாழ | — அ | ,, | |
| | வாழற்க | — க | ,, | — எதிர்மறை. |

[இவ் வியங்கோள் வினைமுற்று, நான் வாழ்க, நாம் வாழ்க, நீ வாழ்க, நீர் வாழ்க, அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க, என இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் வருதல் காண்க.]

**125.** எச்சவினையாவது, திணை, பால், இடம் என்பவற்றைக் காட்டாமல், பொருள் முடிதற்கு மற்றொரு சொல்லை அவாவி நிற்கும் வினை.

**126.** அது (1) பெயர் எச்சம் (2) வினை எச்சம் என இருவகையாம்.

**127.** அவற்றுள் **பெயரேச்சமாவது**, பெயரைக்கொண்டு முடியும் எச்சவினை.

**128.** அ, உம் என்பவை பெயரெச்ச விகுதிகள்.

| | | உடன்பாடு. | விகுதி. |
|---|---|---|---|
| (உ–ம்.) | படித்த | — இறந்தகாலம் | அ |
| | படிக்கின்ற | — நிகழ்காலம் | அ |
| | படிக்கும் | — எதிர்காலம் — | உம் |
| | | எதிர்மறை. | |
| | படிக்காத | — | அ |

[இறந்தகாலப் பெயரெச்சத்திலும், நிகழ்காலப் பெயரெச்சத்திலும், அகர விகுதி வரும். அது இடைநிலை ஏற்றுக் காலத்தைக் காட்டும். உம் விகுதி எதிர் காலப் பெயரெச்சத்தில் வரும். இவ் விகுதி தானே காலத்தைக் காட்டும் என அறிக. எதிர்மறையில் அகர விகுதி மாத்திரம் வரும்.]

**129.** **வினையேச்சமாவது**, வினையைக்கொண்டு முடியும் எச்சவினையாம்.

**130.** உ, இ, ய், பு, ஆ, ஊ, என, என்பவை இறந்தகால வினையெச்ச விகுதிகள்.

| | | | விகுதி. | |
|---|---|---|---|---|
| (உ–ம்) | செய்து | — | உ | |
| | கூடி | — | இ | |
| | போய் | — | ய் | |
| | காண்பு | — | பு | இவ் விகுதிகள் பெரும்பாலும் செய்யுள் வழக்கில்தான் வரும். |
| | காணா | — | ஆ | |
| | காணூ | — | ஊ | |
| | கண்டென | — | என | |

**131.** அ என்பது நிகழ்கால வினையெச்ச விகுதியாம்.

(உ–ம்.) கூவ—அ, விகுதி.

[இந்த விகுதி காரணப் பொருளில் வரும்போது இறந்த காலத்தையும், காரியப்பொருளில் வரும்போது எதிர்காலத்தையும், இவ்விரண்டும் அல்லாத பொருளில் வரும்போது நிகழ்காலத்தையும் உணர்த்தும் என அறிக.]

**132. இன்**, ஆல், கால், **இயர்**, இய, வான், **பான், பாக்கு, கடை, வழி, இடத்து** என்பவை எதிர்கால வினையெச்ச விகுதிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | செயின் | — | இன் | விகுதி |
| | செய்தால் | — | ஆல் | ,, |
| | செய்தக்கால் | — | கால் | ,, |
| | செய்யியர் | — | இயர் | ,, |
| | செய்யிய | — | இய | ,, |
| | செய்வான் | — | வான் | ,, |
| | செய்பாக்கு | — | பாக்கு | ,, |
| | செய்தக்கடை | — | கடை | ,, |
| | செய்தவழி | — | வழி | ,, |
| | செய்தவிடத்து | — | இடத்து | ,, |

(இயர் முதல் கடை வரை:) இவ் விகுதிகள் பெரும் பாலும் செய்யுள் வழக்கில்தான் வரும்.

**133.** து, மல், மே, மை என்பவை எதிர்மறை வினையெச்ச விகுதிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | ஓடாது | — | து. | விகுதி |
| | ஓடாமல் | — | மல். | ,, |
| | ஓடாமே | — | மே. | ,, |
| | ஓடாமை | — | மை. | ,, |

## குறிப்பு வினை.

**134.** குறிப்பு வினையாவது, பொருளாதி ஆறன் அடியாகப் பிறந்து, காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் வினை.

(உ-ம்.) **பொன்னன்.**

[இது பொன் என்னும் பொருட்பெயரின் அடியாக வந்த குறிப்பு வினை: இது நேற்றுப் பொன்னை உடையவனாய் இருந்தான் எனக் கொள்ளின் இறந்த காலத்தையும், இப்பொழுது பொன்னை உடையவனாய் இருக்கின்றான் எனக் கொள்ளின் நிகழ்காலத்தையும், இனிப் பொன்னை உடையவனாய் இருப்பான் எனக் கொள்ளின் எதிர்காலத்தையும் சொல்லுவோனது குறிப்பால் உணர்த்தி நிற்கும்.]

**135.** இதுவும், செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை என இருவகையாம்.

(உ-ம்.) அகத்தினன் — செயப்படுபொருள் குன்றியது.
உடையான் — செயப்படுபொருள் குன்றாதது.

குறிப்பு:—இவை முறையே அகத்திலிருப்பவன், (பொருளை) உடையவன் எனப் பொருள்படும்.

**136.** இங்ஙனம் வரும் இதுவும், எச்சவினை, முற்றுவினை, என இருவகையாம்.

**137.** இக் குறிப்பெச்சமும், பெயரெச்சம், வினை யெச்சம் என இருவகையாம்.

**138.** அ என்பது குறிப்புப் பெயரெச்சத்தின் விகுதி.

| | | | |
|---|---|---|---|
| (உ—ம்.) | கரிய (மலை) | .... உடன்பாடு | அ—விகுதி. |
| | இல்லாத (பொருள்.) | .... எதிர்மறை | |

**139.** அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து என்பன குறிப்பு வினையெச்ச விகுதிகள். இவற்றுள் அகர விகுதி உடன்பாட்டிலும், மற்றவை எதிர்மறையிலும் வரும்.

| (உ—ம்.) | உடன்பாடு. | | விகுதி. |
|---|---|---|---|
| மெல்ல | — | (ப்பேசினன்.) | அ |
| | எதிர்மறை. | | |
| அன்றி | — | (க்கண்டான்.) | றி |
| அல்லது | — | (செய்யான்.) | து |
| அல்லால் | — | (செய்யான்.) | ஆல் |
| அல்லாமல் | — | (செய்யான்.) | மல் |
| அல்லாக்கால் | — | (செய்யான்.) | கால் |
| அல்லாக்கடை | — | (ச்செய்யான்.) | கடை |
| அல்லாவழி | — | (ச்செய்யான்.) | வழி |
| அல்லாவிடத்து | — | (ச்செய்யான்.) | இடத்து |

**140.** குறிப்பு வினைமுற்றானது, தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்று, என மூன்று வகையாம்.

**141.** ஏவல் வினைமுற்றும், வியங்கோள் வினைமுற்றும் விகுதிகளால் காலங் காட்டுவன வாதலின் குறிப்பு வினை முற்றில் வரா.

**142.** ஏன், என், அன் என்பன தன்மை ஒருமைக் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ—ம்.)

| உடன்பாடு. | | விகுதி. |
|---|---|---|
| தாரினேன் | — | ஏன் |
| தாரினென் | — | என் |
| தாரினன் | — | அன் |

எதிர்மறை.

| | | |
|---|---|---|
| இல்லேன் | — | ஏன் |
| இல்லென் | — | என் |
| இல்லன் | — | அன் |

**143.** ஓம், ஏம், எம் என்பன தன்மைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ—ம்.)

| உடன்பாடு. | | விகுதி. |
|---|---|---|
| தாரினோம் | — | ஓம் |
| தாரினேம் | — | ஏம் |
| தாரினெம் | — | எம் |

எதிர்மறை.

| | | |
|---|---|---|
| இல்லோம் | — | ஓம் |
| இல்லேம் | — | ஏம் |
| இல்லெம் | — | எம் |

**144.** ஐ, ஆய், இ என்பன முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ—ம்.)

| உடன்பாடு. | | விகுதி. |
|---|---|---|
| குழையினை | — | ஐ |
| குழையினாய் | — | ஆய் |
| வில்லி | — | இ |

எதிர்மறை.

| | | |
|---|---|---|
| இல்லாய் | — | ஆய் |
| இலி | — | இ |

**145.** **ஈர், இர்** என்பன முன்னிலைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ–ம்.)

| உடன்பாடு. | | விகுதி. |
|---|---|---|
| குழையீர் | — | ஈர் |
| குழையினிர் | — | இர் |
| **எதிர்மறை.** | | |
| இல்லீர் | — | ஈர் |
| இலிர் | — | இர் |

**146.** அன், ஆன் என்பன படர்க்கை ஆண்பாற் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ–ம்.)

| உடன்பாடு. | | விகுதி. |
|---|---|---|
| குழையன் | — | அன் |
| குழையான் | — | ஆன் |
| **எதிர்மறை.** | | |
| இலன் | — | அன் |
| இல்லான் | — | ஆன் |

**147.** அள், ஆள் என்பன பெண்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ–ம்.)

| உடன்பாடு. | | விகுதி. |
|---|---|---|
| குழையள் | — | அள் |
| குழையாள் | — | ஆள் |
| **எதிர்மறை.** | | |
| இலள் | — | அள் |
| இல்லாள் | — | ஆள் |

**148.** அர், ஆர் என்பன பலர்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ–ம்.)

| உடன்பாடு. | | விகுதி. |
|---|---|---|
| குழையர் | — | அர் |
| குழையார் | — | ஆர் |

எதிர்மறை.

இலர் — அர்

இல்லார் — ஆர்

**149.** து, று, டு என்பன ஒன்றன் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ–ம்.)

| உடன்பாடு. | | விகுதி. |
|---|---|---|
| குழையது | — | து |
| அற்று | — | று |
| பொருட்டு | — | டு |
| எதிர்மறை. | | |
| இல்லது | — | து |

**150.** அ என்பது பலவின் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று விகுதி.*

(உ–ம்.)

| உடன்பாடு. | | விகுதி. |
|---|---|---|
| குழையன | — | அ |
| எதிர்மறை. | | |
| இல | — | அ |
| இல்லன | — | ,, |

## IV. இடை.

**151.** இடைச் சொற்களாவன, பெயர்ச்சொல் வினைச் சொற்களைப்போலத் தனித்து வழங்குதல் இன்றி, அவைகளை அடுத்துவருஞ் சொற்கள்.

அவை, வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும், சாரியைகளும், உவமை உருபுகளும், சுட்டும், வினாவும், தத்தம் பொருளை உணர்த்துவனவும் எனப் பலவகையாம்.

**152.** அவற்றுள், வேற்றுமை உருபுகளாவன:—முற்கூறப் பட்ட இரண்டாம் வேற்றுமை உருபு முதலியன.

**153.** விகுதிகளாவன:—சொல் உறுப்பிற் கூறப்படும் அன், ஆன் முதலியன.

**154.** இடைநிலைகளாவன:—சொல் உறுப்பிற் கூறப்படும் த் ட் ற் இன் முதலியன.

---

* இதுவரையில் கூறப்பட்ட வினை விகற்பங்களை யெல்லாம் நூலிறுதியில் உள்ள அட்டவணையில் விளங்கக் காணலாம்.

**155.** சாரியைகளாவன:— சொல் உறுப்பிற் கூறப்படும் அற்று, அத்து, அன் முதலியன.

**156.** உவமை உருபுகளாவன:—போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன முதலியன.

**157.** சுட்டிடைச் சொற்களும், வினாவிடைச் சொற்களுமாவன: — எழுத்தியலிற் கூறப்பட்ட சுட்டெழுத்துகளும் வினாவெழுத்துகளும்.

**158.** தத்தம் பொருளை உணர்த்தும் இடைச்சொற்களாவன, ஏ, ஓ, உம், மற்று, என, என்று, முன், பின், முதலியன.

## V. உரி.

**159.** உரிச்சொற்களாவன, தனித்து வழங்குதல் இன்றிப் பெயர் வினைகளை அடுத்து நின்று அவற்றின் குணத்தை யுணர்த்தும் உரிமை உடைய சொற்கள்.

**160.** அவை, ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்துவனவும், ஒரு சொல் பல குணத்தை உணர்த்துவனவும் என இருவகையாம்.

(உ—ம்.) சால இது "மிகுதி" என்னும் ஒரு பொருள் உணர்த்துவது.

கடி—இது, காப்பு, கூர்மை, விரைவு, அச்சம், முதலிய பல பொருள் உணர்த்துவது.

## VI. சொல் உறுப்பு.

**161.** தமிழ்ச் சொற்கள், பகாப்பதம் பகுபதம் என இரு வகைப்படும்.

**162.** பகாப்பதமாவது, பகுதி விகுதி முதலியனவாகப் பிரிக்கப்படாமல் ஒரு பொருளைக் காட்டுஞ் சொல்.

**163.** அது, பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப்பதம் என நான்கு வகையாம்.

(உ—ம்.) பொன், மண். — பெயர்ப்பகாப்பதம்.
நட, வா. — வினைப்பகாப்பதம்.
ஏ, மற்று. — இடைப்பகாப்பதம்.
மா, நனி. — உரிப்பகாப்பதம்.

**164.** பகுபதமாவது, சொல்லைப் பகுக்கும்போது பகுதிக்கும் விகுதிக்கும் வேறு பொருள் உண்டாய், ஒரு பொருளைத் தெரிவிக்குஞ் சொல்லாம்.

**165.** பகுபதம், பெயர்ப்பகுபதம் வினைப்பகுபதம் என இருவகையாம்.

[குறிப்பு.—இடைச்சொல்லிலும் உரிச்சொல்லிலும் பகுபதம் இல்லை.]

(உ—ம்.) **பொன்னன், தூழையன்.** — பெயர்ப்பகுபதம்.
**வந்து, வந்த, வந்தான்.** — வினைப்பகுபதம்.

**166.** பகுபதத்தின் உறுப்புகள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறும்.

**167.** அவற்றுள், பகுதியாவது பகுபதத்தைப் பிரித்தால் முதலில் நிற்கும் உறுப்பு.

**168.** பெயர்ப்பகுபதத்தின் பகுதிகள், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்ப் பகாப்பதங்கள்.

(உ—ம்.) (பகுபதம்) (பகுதி.)

| | | |
|---|---|---|
| பொன்னன் | — பொன் | — பொருள். |
| ஊரான் | — ஊர் | — இடம். |
| ஓணத்தான் | — ஓணம் | — காலம். |
| கண்ணன் | — கண் | — சினை. |
| கரியன் | — கருமை | — குணம். |
| தட்டான் | — தட்டு | — தொழில். |

**169.** சில இடைச் சொற்களும், சில உரிச்சொற்களும் பெயர்ப்பகுபதத்தின் பகுதிகளாக வருதல் உண்டு.

(உ—ம்.) (பகுபதம்)—(பகுதி)
மற்றவன் —**மற்று** (இடை.)
கடியன் —**கடி** (உரி.)

**170.** வினைப்பகுபதத்தின் பகுதிகள், நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், தின், தேய்,

பார், செல், வவ், வாழ், கேள், என்னும் இவை முதலிய வினைப் பகாப்பதங்களாம்.

(உ—ம்.) (பகுபதம்.) (பகுதி.)
நடந்த.................நட.
வந்து..................வா.
மடித்தான்...........மடி.

**171.** சில பெயர்ச்சொற்களும், சில இடைச்சொற்களும், சில உரிச்சொற்களும், வினைப்பகுபதப் பகுதிகளாக வருதல் உண்டு.

(உ—ம்.) (பகுபதம்) (பகுதி.)
கடைக்கணித்தான்......கடைக்கண் (பெயர்.)
போன்றான்.............போல் (இடை.)
கூர்ந்தான்...............கூர் (உரி.)

**172.** விகுதியாவது பகுபதத்தைப் பிரித்தால் ஈற்றில் நிற்கும் உறுப்பு.

**173.** பெயர்ப்பகுபத விகுதிகள், அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, து, இ, மார், மன், மான், கள், வை, கை, பி, ன், ள், ர், என்னும் இவை முதலியன.

உதாரணம் :

| (பகுபதம்) | (விகுதி.) | (பகுபதம்) | (விகுதி.) |
|---|---|---|---|
| குழையன்.................. | அன். | வடமன்.................. | மன். |
| வானத்தான்.............. | ஆன். | கோமான்................ | மான். |
| குழையள்.................. | அள். | கோக்கள்................. | கள். |
| குழையாள்................ | ஆள். | அவை...................... | வை. |
| குழையர்.................. | அர். | தங்கை..................... | கை. |
| வானத்தார்.............. | ஆர். | தம்பி....................... | பி. |
| குழையன.................. | அ. | பிறன்...................... | ன். |
| யாது........................ | து. | மகள்....................... | ள். |
| பொன்னி.................. | இ. | பிறர்....................... | ர். |
| தேவிமார்.................. | மார். | | |

**174.** வினைப்பகுபத விகுதிகள், அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, அ, ஆ, ஐ, ஆய், இர், ஈர், ஏன், அம், ஆம், ஓம்,

உம், க, உ, இ, ய், கு, இன், கால், மல், மே, து, என்னும் இவை முதலியன.

(உதாரணம்)

| (பகுபதம்.) | (விகுதி.) | (பகுபதம்.) | (விகுதி.) |
|---|---|---|---|
| வந்தனன் | அன். | வந்தாம் | ஆம். |
| வந்தான் | ஆன். | வந்தோம் | ஓம். |
| வந்தனள் | அள். | வாரும் | உம். |
| வந்தாள் | ஆள். | வருக | க. |
| வந்தனர் | அர். | வந்து | உ. |
| வந்தார் | ஆர். | ஓடி | இ. |
| வந்தது | து. | போய் | ய். |
| வந்தன | அ. | உண்ணற்கு | கு. |
| வரா | ஆ. | வரின் | இன். |
| வந்தனை | ஐ. | வந்தால் | ஆல். |
| வந்தாய் | ஆய். | வந்தக்கால் | கால். |
| வந்தனிர் | இர். | வராமல் | மல். |
| வந்தீர் | ஈர். | வராமே | மே. |
| வந்தேன் | ஏன் | வராது | து. |
| வந்தனம் | அம். | | |

**175.** இடைநிலையாவது, பெயர்ப் பகுபதத்திலே காலத்தைக் காட்டாமலும், வினைப் பகுபதத்திலே காலத்தைக் காட்டிக்கொண்டும், பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலே வருவது.

[சாரியை, சந்தி, விகாரம் என்பனவும், பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலே வருவனவாயினும், இடைநிலை என்னும் உறுப்பு, பகுதி விகுதிகளைப்போல வினைப்பகுபதத்திலே காலத்தைக் காட்டுதலாகிய பொருள் பயந்து நிற்பதாகையாலும், சாரியை, சந்தி, விகாரம் என்னும் உறுப்புகள் அங்ஙனம் பொருள் பயந்து வருவனவல்லவாகையாலும், இடைநிலையே அங்ஙனம் கூறப்படுவதாயிற்று.]

**176.** பெயர்ப்பகுபதத்தைப் பகுதி விகுதிகளாகப் பிரிக்கும்போது, நடுவில் யாதேனும் ஓரெழுத் திருந்தால், அது பெயர்ப்பகுபத **இடைநிலை** எனப்படும்.

| (உ-ம்.) (பகுபதம்) | (இடைநிலை.) |
|---|---|
| வலைச்சி | ச். |
| வலைஞன் | ஞ். |

**177.** வினைப்பகுபத இடைநிலை, இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்று வகையாம்.

**178.** இறந்தகால இடைநிலைகள் த், ட், ற், இன் என்பன.

| | (பகுபதம்) | (இடைநிலை.) |
|---|---|---|
| (உ–ம்.) | செய்தான்................. | த். |
| | கண்டான்................. | ட். |
| | சென்றான்................. | ற். |
| | கூடினான்................. | இன். |

**179.** நிகழ்கால இடைநிலைகள், கிறு, கின்று, ஆநின்று என்பன.

| | (பகுபதம்) | (இடைநிலை.) |
|---|---|---|
| (உ–ம்.) | செய்கிறான்................. | கிறு. |
| | செய்கின்றான்............... | கின்று. |
| | செய்யாநின்றான்........... | ஆநின்று. |

**180.** எதிர்கால இடைநிலைகள், ப், வ் என்பன.

| | (பகுபதம்) | (இடைநிலை.) |
|---|---|---|
| (உ–ம்.) | காண்பான்................... | ப். |
| | செய்வான்.................... | வ். |

**181.** சாரியைகளாவன, பகுதிகளோடு இடை நிலைகளும், இடை நிலைகளோடு விகுதிகளும் சேரும்போது, அவற்றைச்சார்ந்து அவற்றுக்கு இடையில் நிற்கும் அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் முதலியனவாம்.

| (பகுபதம்) | (சாரியை) |
|---|---|
| செய்தனன்................... | அன். |

[இது இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வந்தது.]

| | (பகுபதம்) | (சாரியை) |
|---|---|---|
| (உ–ம்.) | செய்குவான்......... | கு. |

[இது பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வந்தது.]

**182.** இச் சாரியைகள் பெயர்ச்சொற்களோடு வேற்றுமை உருபுகள் சாரும்போதும் வரும். பெயர்ச்சொல்லேப்பற்றிக் கூறிய இடத்தில் அவற்றைக் காண்க.

**183.** புணரியலில் கூறப்படும் தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் புணர்ச்சி விகாரங்கள் மூன்றும், பகுபத உறுப்பினுள் வந்தால் அவை **சந்தி** எனப்படும்.

(உ—ம்.) (பகுபதம்) (சந்தி.)
படித்தான்.................த் தோன்றியது.
கற்க......................கல் என்னும் பகுதியில் உள்ள ல், ற் ஆகத் திரிந்தது.
ஓடினன்..................ஓடு என்னும் பகுதியின் உகரங் கெட்டது.

**184.** வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், தொகுத்தல், விரித்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என்னும் செய்யுளுக்குரிய விகாரங்கள் ஒன்பதும் பகுபத உறுப்பினுள் வரின், அவை **விகாரங்கள்** எனப்படும்.

(உ—ம்.) நீத்தம்—(நீந்து – பகுதி) இதில் ந், த் ஆனது வலித்தல்.
நடந்தான் — இதில் சந்தியாக வந்த த், ந் ஆனது மெலித்தல்.
கோடும் — இதில் கொள் என்னும் பகுதியின் முதல் எழுத்தாகிய கொ என்பது கோ என்றானது நீட்டல்.
வந்தான் — இதில் வா என்னும் பகுதி வ என்றானது குறுக்கல்.
வருவான்—இதில் ரு வந்தது விரித்தல்.
நலம் — இதில் சந்தியாகத் தோன்றவேண்டிய ல் தோன்றாமல் மறைந்தது தொகுத்தல்.
ஆன — இதில் இன் என்னும் இறந்தகால இடைநிலையின் முதல் எழுத்தாகிய இகரங் கெட்டது முதற்குறை.
நசை — இதில் 'நச்சு' என்னும் பகுதியின் இடையில் உள்ள ச் கெட்டது இடைக்குறை.
நடை— இதில் 'நட' என்னும் பகுதியில் ஈற்றகரம் கெட்டது கடைக்குறை.

## VII. வழக்கு.

**185.** உலக வழக்கத்தில் சொற்கள் வழங்கும் வகை வழக்கு எனப்படும்.

அது இயல்பு வழக்கு தகுதி வழக்கு என இரு வகையாம்.

**186.** இயல்பு வழக்காவது, ஒரு பொருளுக்குத் தொன்று தொட்டு இயல்பாய் அமைந்த சொல்லால் அப் பொருளைக் கூறுவது.

**187.** அது இலக்கணம் உடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூன்று வகையாம்.

**188.** அவற்றுள், இலக்கணம் உடையதாவது இலக்கண விதிக்கு ஒத்திருக்குஞ் சொல்.

(உ—ம்.) நிலம், நீர், படிக்கின்றான், வருகின்றான்.

**189.** இலக்கணப்போலியாவது, இலக்கணமுடையதாய் இராமல் முன் பின்னாக மாறி நின்றும் இலக்கணம் உடையது போல் தோன்றுஞ் சொல்.

(உ—ம்.) முன்றில் —இது இல்முன் என்பது முன் பின்னாக மாறியது.

கடைத்தலை —இது தலைக்கடை என்பது முன் பின்னாக மாறியது.

புறநகர் —இது நகர்ப்புறம் என்பது முன் பின்னாக மாறியது.

**190.** மரூஉவாவது, சிதைந்து வழங்குஞ் சொல்.

(உ—ம்) அருமந்தபிள்ளை—இது அருமருந்தன்ன பிள்ளை என்பது சிதைந்து வந்தது.

தஞ்சை —இது தஞ்சாவூர் என்பது சிதைந்து வந்தது.

சென்னை —இது சென்னப்பட்டினம் என்பது சிதைந்து வந்தது.

உறந்தை —இது உறையூர் என்பது சிதைந்து வந்தது.

**191.** தகுதி வழக்காவது, ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லை ஏதேனும் தகுதியான காரணம்பற்றி நீக்கி வேறொருசொல்லால் அப் பொருளைக் கூறுவது.

**192.** அது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்று வகையாம்.

**193.** இடக்கரடக்கல் ஆவது சொல்லத்தகாததை மறைத்துச் சொல்லுதல்.

(உ—ம்.) கால் கழுவி வந்தான்.
வாய்பூசி வந்தான்.
தோட்டத்துக்குப் போனான்.

[இடக்கர் = சொல்லத்தகாதது. அடக்கல் = மறைத்தல். இடக்கர் என்பது இடக்கு + அர் எனப் பிரிக்கப்படும்; இதில் அர் என்பது போலி.]

**194.** மங்கலம் ஆவது, மங்கலம் அல்லாததை மங்கலமாகச் சொல்லுவது.

(உ—ம்.) நன்காடு. (சுடுகாடு என்பது இப்படிச் சொல்லப்பட்டது.)
துஞ்சினான். (இறந்தான் என்பது இப்படிச் சொல்லப்பட்டது. துஞ்சுதல் = தூங்குதல்.)
வானடைந்தான். (இதுவும் அப்பொருளில் வந்ததே.)

**195.** குழூஉக்குறியாவது, ஒரு கூட்டத்தார் ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லை ஒழித்துத் தமக்குள் மாத்திரம் வழங்குதற் பொருட்டு அமைத்துக்கொண்ட குறி.

(உ—ம்.) சொல் விளம்பி (கள்.)
பறி (பொன்.)
குணவெள்ளை (மூன்று ரூபாய்.)

## அந்நிய பாஷைச் சொற்கள்.

**196.** தமிழில் அந்நியபாஷைச் சொற்கள் வந்து வழங்குவதும் உண்டு. அவை திசைச்சொல் வடசொல் என இரு வகைப்படும்.

**197.** தமிழில் சமஸ்கிருதம் ஒழிந்த மற்றைய பாஷைச் சொற்கள் வரின் அவை **திசைச்** சொற்கள் எனப்படும்.

[திசைச்சொற்கள் தமக்குச் சிறப்பாயினவும், தமிழில் இல்லாதனவுமாகிய ஒலிகளைக் கொண்ட எழுத்துகளை உடையனவாகவேனும், தமிழ் நடைக்கு ஒவ்வாத உச்சரிப்பு உடையனவாகவேனும் இருந்தால்,

அவை தமிழில் வழங்கும்போது தமக்கு இயல்பான ஒலி சிறிது பேதப்பட்டுத் தமிழ் நடைக்கேற்ப மாறுதலடையும்; அல்லாதவை தமக்குரிய ஓசையேகொண்டு வழங்கப்பெறும்.]

(உ-ம்.) **புனல்** — இது Funnel என்னும் **ஆங்கிலச்சொல்** தன் ஒலிமாறித் தமிழொலி பெற்றது.

கலெக்ற்றர்— இது Collector என்னும் **ஆங்கிலச்சொல்.** தன் ஒலிமாறுமல் நின்றது.

வாடிக்கை— இது வாடுக என்னும் **தெலுங்குச்சொல்.** தன் ஒலி திரிந்தது.

கெம்பு — இது கெ(ம்)பு என்னும் **தெலுங்குச்சொல்.** தனக்குரிய ஓசையே கொண்டு வழங்குவது.

அலமாரி — இது Almirah என்னும் **போர்த்துகேசியச் சொல்.** தனக்குரிய ஓசை மாறித் தமிழோசை பெற்றது.

**198.** தமிழில்வந்து வழங்கும் சமஸ்கிருத பாஷையின் சொற்கள் **வடசொல்** எனப்படும்.

[திசைச் சொற்களைவிட வடசொற்களே தமிழில் மிகுதியாக வழங்குகின்றன.]

**199.** திசைச் சொற்களைப்போலவே வடசொற்களும் தமிழில் வழங்கும்போது சில சொற்கள் தம் ஓசை வேறுபடாமலும், சில சொற்கள் தம் ஓசை வேறுபட்டும் நிற்கும்.

**200.** தன் ஓசை வேறுபடாமல் தமிழில் வழங்கும் வடசொல் **தற்சமம்** எனப்படும். (தத் = அதற்கு: சமம் = சரியானது.)

(உ-ம்.) கமலம், காரணம், மூலம்.

**201.** தன் ஓசை வேறுபட்டுத் தமிழுக்கு இசைந்த ஓசை பெற்று வழங்கும் வடசொல் **தற்பவம்** எனப்படும். (தத் = அதினின்றும்: பவம் = பிறந்தது.)

(உ-ம்.)

| (இயற்கை ஓசை.) | (தற்பவமான ஓசை.) |
|---|---|
| ஹீநம் | ஈனம். |
| பக்ஷம் | பக்கம். |
| சம்பகம் | சண்பகம். |
| ஸ்ரீதேவி | சீதேவி. |
| ஸ்ரீமான் | சீமான். |

# III. புணரியல்.

## i. புணர்ச்சி.

**202.** புணர்ச்சியாவது, நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுய்க் கூடுவது.

**203.** நிலைமொழியாவது, முன்னே நிற்கும் மொழி; வருமொழியாவது, பின் அதனோடு வந்து சேரும் மொழி.

(உ–ம்.) **கண்ணன் வந்தான்.**

இதில் 'கண்ணன்' என்பது நிலைமொழியும், 'வந்தான்' என்பது வருமொழியுமாம்.

**204.** புணர்ச்சி, பொருட் புணர்ச்சி எழுத்துப் புணர்ச்சி என இருவகைப்படும்.

## ii. பொருட் புணர்ச்சி.

**205.** அவற்றுள், பொருட் புணர்ச்சியாவது, நிலைமொழியும் வருமொழியும் அர்த்த சம்பந்தத்தாற் கூடுவது.

**206.** அது, வேற்றுமைப் புணர்ச்சி எனவும் அல்வழிப் புணர்ச்சி எனவும் இருவகைப்படும்.

**207.** வேற்றுமைப்புணர்ச்சியாவது, இடையில் வேற்றுமை உருபுகள் மறைந்தேனும் வெளிப்பட்டேனும் நிற்க, நிலைமொழியும் வருமொழியும் கூடுவதாம்.

(உ–ம்.) பணஞ்சேர்த்தான் — வேற்றுமை உருபு மறைந்து நின்றது.
பணத்தைச்சேர்த்தான் — வேற்றுமை உருபு வெளிப்பட்டு நின்றது.

**208.** வேற்றுமைப்புணர்ச்சி, உருபுடைய வேற்றுமைகளாகிய இரண்டாம் வேற்றுமைமுதல் ஏழாம் வேற்றுமை வரையினுமுள்ள ஆறு வேற்றுமைகளால் ஆகும்.

[வேற்றுமை எட்டாமேனும், முதல்வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபில்லாமையினுல் அவ்விரண்டினையும் நீக்கி, வேற்றுமைப் புணர்ச்சி ஆறு எனப்பட்டது.]

**209.** வேற்றுமை உருபு இடையிலே மறைந்திருக்க, நிலைமொழியும் வருமொழியுங் கூடுவது வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் எனவும், இடையிலே வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்க அவ்விருமொழியுங் கூடுவது வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் எனவும் கூறப்படும்.

| (உ-ம்.) (தொகைநிலை.) | (தொகாநிலை.) | |
|---|---|---|
| நீர்குடித்தான் | நீரைக்குடித்தான் | —2ம் வேற்றுமை. |
| கல்லெறிந்தான் | கல்லால் எறிந்தான் | —3 ,, |
| கூலிவேலை | கூலிக்கு வேலை | —4 ,, |
| மலைவீழருவி | மலையின்வீழ் அருவி | —5 ,, |
| பொன்னன்கை | பொன்னனது கை | —6 ,, |
| காட்டுப்புலி | காட்டிற்புலி | —7 ,, |

**210.** வேற்றுமைத் தொகையில் உருபு மறைந்து நிற்பதேயன்றி, உருபினோடு உருபுகொண்டு முடியும் வினைச்சொல்லும் மறைந்திருப்ப துண்டு. அத்தகைய தொகைநிலைத்தொடர்கள் உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும்.

[இங்கே பயன் என்றது உருபுகொண்டு முடியும் வினைச்சொல்லை என்றறிக. ஆறும்வேற்றுமை உருபு பெயரைக்கொண்டு முடிவதாதலால் அவ் வேற்றுமையில் உருபும் பயனும் உடன் தொகுதல் இல்லை.]

(உ-ம்.) தயிர்க்குடம்.

[இது 'தயிரை உடைய குடம்' என்றாம். இதில் "ஐ" என்னும் இரண்டாம் வேற்றுமைஉருபும், "உடைய" என்னும் வினைச்சொல்லும் மறைந்து நின்றன.]

பொற்குடம்.

[இது 'பொன்னாற் செய்த குடம்' என்றாம். இதில் "ஆல்" என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும், 'செய்த' என்னும் வினைச்சொல்லும் மறைந்து நின்றன.]

[இங்ஙனமே ஆறும் வேற்றுமையொழிந்த மற்றைய வேற்றுமைகளில் உருபும் பயனும் உடன் தொக்குவரும் தொகைகளைக் கவனித்தறிக.]

**211.** அல்வழிப்புணர்ச்சியாவது, வேற்றுமை உருபுகள் இடையில் மறைந்தேனும் வெளிப்பட்டேனும் நிற்காமல், நிலைமொழியும் வருமொழியும் கூடுவதாம்.

[வேற்றுமை அல்லாத வழி அல்வழி. அதாவது உருபுடைய வேற்றுமைகளின் அர்த்தமல்லாத அர்த்தத்தில் நிலைமொழியும் வருமொழியும் கூடுவதே அல்வழிப்புணர்ச்சியாம் என்பது. ஆதலால், அப் புணர்ச்சியில் நிலைமொழி வருமொழிகளுக் கிடையில் வேற்றுமையுருபுகள் வரா என்றறிக.]

**212.** அல்வழிப்புணர்ச்சி பதினான்காகும்.

**213.** அவை தொகை நிலைத்தொடர் தொகாநிலைத்தொடர் என இருவகைப்படும்.

**214.** அவற்றுள், தொகைநிலைத்தொடர் ஐந்தாம். அவை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்பன.

**215.** வினைத்தொகையாவது, ஒரு தெரிநிலை வினைச்சொல்லின் பகுதியும் ஒரு பெயர்ச்சொல்லுஞ் சேர்ந்திருப்பது. அது விரிந்தால் முக்காலப் பெயரெச்சங்களாம்.

(உ–ம்.) விடுகணை.

[இது விரியின், விட்ட கணை, விடுகின்ற கணை, விடுங் கணை என முக்காலப் பெயரெச்சங்க ளாதல் காண்க.]

**216.** பண்புத்தொகை யானது, பண்புத்தொகை இருபெயரொட்டுப் பண்புத்தொகை என இரண்டு வகைப்படும்.

அவற்றுள்,

**217.** பண்புத்தொகையாவது இடையில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து நிற்க, பண்பை உணர்த்தும் பெயர்ச்சொல்லும் பண்பை உடைய பொருளை உணர்த்தும் பெயர்ச்சொல்லும் ஒன்றுபடக் கூடுவது.

(உ–ம்.) கருங்குதிரை.

[பண்பு-குணம். 'கருங்குதிரை' என்பது கருமை—குதிரை எனப் பிரிக்கப்படும். இதில் கருமை என்பது பண்பை உணர்த்தும் பெயர்ச்சொல்; குதிரை என்பது அப் பண்பை உடைய பொருளை உணர்த்தும் பெயர்ச்சொல். இத் தொடர் விரிகையில் கருமை யாகிய குதிரை என விரிதல் காண்க.]

**218.** இருபெயரொட்டுப் பண்புத்தொகை யாவது, இடையில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து நிற்க, ஒரு பொருளை உணர்த்தவரும் ஒரு சிறப்புப் பெயரும் பொதுப் பெயரும் ஒன்றாய்க் கூடுவது.

(உ–ம்.) பனைமரம்.

[இது விரியின் பனையாகிய மரம் என்றாம். இதில் 'பனை' என்பது சிறப்புப்பெயர். 'மரம்' என்பது பொதுப்பெயர். 'ஆகிய' என்பது பண்புருபு.]

**219.** உவமைத் தொகை யாவது, இடையில் 'போல,' 'போன்ற'—என்னும் இவை முதலிய உவமை உருபுகளில் ஒன்று மறைந்திருக்க, உபமானத்தை உணர்த்துஞ் சொல்லும், உபமேயத்தை உணர்த்துஞ் சொல்லும் ஒன்றாய்க் கூடுவது.

(உ–ம்.) மதிமுகம்.

[இது விரியின் மதி போன்ற முகம் என்றாம். இதில் 'மதி' என்பது உபமானத்தை உணர்த்துஞ் சொல். 'முகம்' என்பது உபமேயத்தை உணர்த்துஞ் சொல். 'போன்ற' என்பது உவமை உருபு.]

**220.** உம்மைத் தொகையாவது, இரண்டு சொற்களும் இரண்டின் மிக்க சொற்களும் தொடர்ந்துநிற்க, அவற்றுள் ஒவ்வொன்றோடும் 'உம்' என்பது மறைந்து நிற்கப் பெறுவது.

(உ–ம்.) இராப்பகல்.

சேர சோழ பாண்டியர்.

[இவை விரியின் இரவும் பகலும் எனவும், சேரனும், சோழனும், பாண்டியனும் எனவுமாம். இவற்றுள் முதலது இரண்டு சொற்களின் தொடர்; இரண்டாவது இரண்டின் மிக்க சொற்களின் தொடர். இத்தொடர்களில் ஒவ்வொரு சொல்லோடும் 'உம்' என்பது மறைந்து நிற்றல் காண்க.]

**221.** அன்மொழித்தொகை யாவது, வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, என்னும் ஐவகைத் தொகைகளில் ஒன்றாயுள்ள தொடர் மொழிக்குப் புறத்தில் வேறு ஒருசொல் மறைந்திருக்கப் பெறுவது.

(உ–ம்.) பொற்றொடி வந்தாள்.
தாழ்குழல் ,,
கருங்குழல் ,,
மதிநுதல் ,,

[இவற்றுள், பொற்றொடி என்பது 'பொன்னாற் செய்யப்பட்ட வளையல்' என்றாம். இத் தொடர் உருபும் பயனும் உடன் தொக்க மூன்றாம் வேற்றுமைத் தொகை. இது வந்தாள் என்னும் வருமொழியை நேரே தழுவவில்லை. 'பொற்றொடியை அணிந்த பெண் வந்தாள்' என்று விரித்தால் தான் பொருள் பொருந்தும். பொன்னும் தொடியும் ஆகிய இவற்றுக்குப் புறமாகப் 'பெண்' என்னும் வேறு ஒரு சொல் மறைந்திருந்து

பொருள் தருவதால் இத்தொடர் அன்மொழித்தொகையாயிற்று. (அல்+மொழி=அன்மொழி = குறித்த சொற்களுக்கு உட்பட்டதல்லாத வேறு மொழி.) இங்ஙனமே, மற்றவற்றையுங் கண்டுகொள்க.]

**222.** தொகாநிலைத் தொடரானது (1) எழுவாய்த் தொடர் (2) விளித் தொடர், (3) பெயரெச்சத் தொடர், (4) வினையெச்சத் தொடர், (5) தெரிநிலை வினைமுற்றுத் தொடர், (6) குறிப்பு வினைமுற்றுத் தொடர், (7) இடைச் சொற்றொடர், (8) உரிச் சொற்றொடர், (9) அடுக்குத் தொடர்—என ஒன்பதாம்.

**223.** அவற்றுள், எழுவாய்த் தொடர், முதல்வேற்றுமையை ஏற்ற பெயர்ச்சொல் வருமொழியைத் தொடர்ந்து நிற்பது.

(உ—ம்.) இராமன் வந்தான்.

**224.** விளித் தொடராவது, எட்டாம் வேற்றுமையை ஏற்ற பெயர்ச்சொல் வருமொழியைத் தொடர்ந்து நிற்பது.

(உ—ம்.) இராமா! படி.

**225.** பெயரெச்சத் தொடராவது, பெயரெச்சம் வருமொழியைத் தொடர்ந்து நிற்பது.

(உ—ம்.) வந்த மனிதன்.
கரிய குதிரை.

**226.** வினையெச்சத் தொடராவது, வினையெச்சம் வருமொழியைத் தொடர்ந்து நிற்பது.

(உ—ம்.) வந்து சொன்னான்.
மெல்லப் பேசினான்.

**227.** தெரிநிலை வினைமுற்றுத் தொடராவது, தெரிநிலை வினைமுற்று வருமொழியைத் தொடர்ந்து நிற்பது.

(உ—ம்.) வந்தான் ராமன்.

**228.** குறிப்பு வினைமுற்றுத் தொடராவது, குறிப்பு வினைமுற்று வருமொழியைத் தொடர்ந்து நிற்பது.

(உ—ம்.) பொன்னன் இவன்.

**229.** இடைச் சொற்றொடராவது, இடைச்சொல் வருமொழியைத் தொடர்ந்து நிற்பது.

(உ—ம்.) மற்று ஒன்று.

**230.** உரிச்சொற்றொடராவது, உரிச்சொல் வருமொழியைத் தொடர்ந்து நிற்பது.

(உ-ம்.) சால உழைத்தான்.

**231.** அடுக்குத் தொடராவது, ஒருசொல் இரண்டு முதலாக அடுக்கிவருவது.

(உ-ம்.) வந்தான் வந்தான்.
பாம்பு பாம்பு.
கண்டேன் கண்டேன் கண்டேன்.

## iii. எழுத்துப் புணர்ச்சி.

**232.** எழுத்துப் புணர்ச்சியானது, இயல்புப் புணர்ச்சி விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும்.

**233.** அவற்றுள், இயல்புப் புணர்ச்சி யாவது, நிலைமொழியும் வருமொழியும் விகாரப்படாமல் புணர்வது.

(உ-ம்.) அலை பெரிது.
நிலம் வலிது.
பொன் மலை.

**234.** விகாரப் புணர்ச்சி யாவது, இடையில் எழுத்தேனும் சாரியையேனும் தோன்றுதலும், நிலைமொழியின் ஈற்றெழுத்தாவது வருமொழியின் முதலெழுத்தாவது அவை இரண்டுமாவது திரிதலும் கெடுதலும் அடைய, நிலைமொழியும் வருமொழியுங் கூடுவது.

(உ-ம்.) மா + காய் = மாங்காய்—(ங்) எழுத்துத் தோன்றல்.
ஆல் + காய் = ஆலங்காய்—(அம்) சாரியை தோன்றல்.
பொன் + குடம் = பொற்குடம்—(ன்) திரிதல்.
என் + தந்தை = என்றந்தை —(த்) திரிதல்.
எள் + நெய் = எண்ணெய்—(ள், ந்) திரிதல்.
மரம் + வேர் = மரவேர் —(ம்) கெடுதல்.

**235.** நிலைமொழியின் ஈற்றில் வரும் எல்லா எழுத்துகளின் முன்னும் வரும் ஞ ந ம என்னும் மெல்லினமும் ய வ என்னும் இடையினமும் இயல்பாம்.

(உ-ம்.) வாய் + ஞானம் = வாய்ஞானம்.
கொடி + நீண்டது = கொடிநீண்டது.

நுனி + முரிந்தது = நுனிமுரிந்தது.
மலை + யாறு = மலையாறு.
மனம் + வலித்து = மனம்வலிது.

**236.** தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த யகர மெய்யின் முன்னும், ஓரெழுத் தொருமொழியாய் வரும் உயிர், உயிர் மெய் ஆகிய ஐகாரத்தின் முன்னும் வரும் மெல்லெழுத்துகள் மிகும்.

(உ-ம்.) (*a*) மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்.
மெய் + நீட்சி = மெய்ந்நீட்சி.
மெய் + மாட்சி = மெய்ம்மாட்சி.

(*b*) ஐ + மாட்சி = ஐம்மாட்சி.
கை + ஞாற்சி = கைஞ்ஞாற்சி.
கை + மாட்சி = கைம்மாட்சி.
கை + நீண்டது = கைந்நீண்டது.

**237.** பொதுப் பெயர்களின் ஈற்றிலும் உயர்திணைப் பெயர்களின் ஈற்றிலும் உள்ள மெய்யெழுத்துகளின் முன் வல்லெழுத்துகள் வரின், அம் மெய்யெழுத்துகள் இயல்பாம்.

[இங்குப் பொதுப்பெயராவது உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகிய பெயர்.]

(உ-ம்.) (பொதுப் பெயர்.)

சாத்தன் + கை = சாத்தன்கை.
சாத்தன் + குறிது = சாத்தன்குறிது.

(உயர்திணைப் பெயர்.)

பொன்னன் + கண்டான் = பொன்னன்கண்டான்.

**238.** உயிரெழுத்துகளையும் ய் ர் என்னும் மெய்யெழுத்துகளையும் ஈற்றில் உடைய பொதுப் பெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் முன்வரும் வல்லினம் மிகாது இயல்பாம்.

(உ-ம்.) (பொதுப் பெயர்.)

தந்தை + குறியன் = தந்தைகுறியன்.
தந்தை + குறிது = தந்தைகுறிது.
தாய் + குறியள் = தாய்குறியள்.

தாய் + குறிது = தாய்குறிது.
தந்தை + கை = தந்தைகை.
தாய் + கை = தாய்கை.

[தந்தை தாய் என்பன பொதுப்பெயர்கள். இப் பிள்ளையின் தந்தை இவன், இக் கன்றின் தந்தை இவ்வெருது எனவும், இப் பிள்ளையின் தாய் இவள் இக் கன்றின் தாய் இப் பசு எனவும் வருதல் காண்க. ரகரமெய் பொதுப் பெயர்களுக்கு ஈறாய் வராது.]

(உ-ம்.) (உயர்திணைப் பெயர்.)

தம்பி + கண்டான் = தம்பிகண்டான்.
சேய் + சிறியன் = சேய்சிறியன்.
பெரியர் + கண்டார் = பெரியர்கண்டார்.
தம்பி + கை = தம்பிகை.
சேய் + சிறுமை = சேய்சிறுமை.
பெரியர் + கை = பெரியர்கை.

**239.** மொழியின் ஈற்றில் வரும் வினாவின் முன்னும், விளிப்பெயர் முன்னும் வல்லெழுத்து வரின் இயல்பாகும்.

(உ-ம்.) (மொழியீற்று வினா.)

தம்பியா + கொடுத்தான் = தம்பியா கொடுத்தான்.
அவனோ + கண்டான் = அவனோ கண்டான்.

(விளிப் பெயர்.)

கண்ணா + படி = கண்ணாபடி.
ராமா + கேள் = ராமாகேள்.

**240.** இ, ஈ, ஐ என்னும் இம் மூன்றுயிர்களும் நிலைமொழியின் ஈற்றில் நிற்க, வருமொழி முதலில் உயிர் வந்தால், இடையில் யகர உடம்படுமெய் தோன்றும்.

[உடம்படு மெய்யாவது, உயிரோடு உயிர்கூடி நிற்றல் இல்லாமையால் வருமொழி முதலில் வரும் உயிருக்கு உடம்பாக அடுக்கும் மெய்யாகும்.]

(உ-ம்.) கனி + உதிர்கின்றது = கனியுதிர்கின்றது.
தீ + எரிந்தது = தீ யெரிந்தது.
பனை + ஓலை = பனையோலை.

**241.** அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரெழுத்துகளுக்கு முன் உயிர் வந்தால் வகர உடம்படுமெய் தோன்றும்.

(உ-ம்.) பல + அணி = பலவணி.
பா + அது = பாவது.

நடு + இடம் = நடுவிடம்.
பூ + அழகு = பூவழகு.
கோ + அழகு = கோவழகு.
கௌ + அழகு = கௌவழகு.

**242.** ஓரெழுத்தொரு மொழியாகிய ஏ, சே, தே என்னும் பெயர்ச்சொல் ஏகாரத்திற்கு முன் உயிர் வந்தால் வகர வுடம்படு மெய் தோன்றும்.
[ஏ=அம்பு. சே=எருது. தே=தெய்வம்.]

(உ–ம்.) ஏ + எறிந்தான் = ஏவெறிந்தான்.
சே + அழகு = சேவழகு.
தே + ஆலயம் = தேவாலயம்.

**243.** 'செம்மை' என்னும் பண்புச் சொல்லின் விகாரமாகிய 'சே' என்பதற்கு முன் உயிர் வந்தால், இடையில் யகரமேனும் வகரமேனும் தோன்றும்.

(உ–ம்.) சே + அடி = சேவடி } சேயடி }

**244.** இடைச்சொல் ஏகாரத்தின் முன் உயிர் வந்தால் யகர உடம்படு மெய் தோன்றும்.

(உ–ம்.) அவனே + அடித்தான் = அவனேயடித்தான்.

**245.** அ இ உ என்னும் சுட்டின் முன்னும் எகர வினாவின் முன்னும் உயிரும் யகரமும் வந்தால் இடையில் வகர மெய் தோன்றும்.

(உ–ம்.) (உயிர்.)

அ + ஆடு = அவ்வாடு — }
இ + உடல் = இவ்வுடல் — } சுட்டு.
உ + உயிர் = உவ்வுயிர் — }
எ + அணி = எவ்வணி — எகரவினா.

(யா.)

அ + யானை = அவ்யானை — }
இ + யானை = இவ்யானை — } சுட்டு.
உ + யானை = உவ்யானை — }
எ + யானை = எவ்யானை — எகரவினா.

[சுட்டு முன்னும் எகர வினா முன்னும் உயிர் வர, இவ்விதியின்படி இடையில் தோன்றிய வகர மெய் இரட்டுமாறு (262-வது) விதியிற் காண்க.]

**246.** அ, இ, உ என்னும் சுட்டின் முன்னும் எகர வினா முன்னும் யகரம் ஒழிந்த மூன்றினமெய்களும் வந்தால் வந்த எழுத்தே மிகும்.

(உ–ம்.) (வல்லினம்.)

அ + காலம் = அக்காலம்.
இ + சிறுவன் = இச்சிறுவன்.
உ + தந்தை = உத்தந்தை.
எ + பனி = எப்பனி.
} க, ச, த, ப.

(மெல்லினம்.)

அ + ஙனம் = அங்ஙனம்.
இ + ஞாலம் = இஞ்ஞாலம்.
இ + நாள் = இந்நாள்.
எ + மனிதன் = எம்மனிதன்.
} ங, ஞ. ந, ம.

(இடையினம்.)

அ + வாரம் = அவ்வாரம்.
இ + வாழை = இவ்வாழை.
உ + வரம் = உவ்வரம்.
எ + வழி = எவ்வழி.
} வ.

**247.** அ. இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் திரிபாகிய அந்த, இந்த, உந்த என்பவற்றின் முன்னும், எ என்னும் வினா எழுத்தின் திரிபாகிய எந்த என்பதன் முன்னும், வல்லெழுத்து மிகும்.

(உ–ம்.) அந்த + கனி = அந்தக்கனி.
இந்த + சோலை = இந்தச்சோலை.
உந்த + தெய்வம் = உந்தத்தெய்வம்.
எந்த + பதம் = எந்தப்பதம்.
} க, ச, த, ப.

**248.** குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்தால், அவ்வுகரங்கெட்டு அது ஏறிய மெய்யில் வந்த உயிர் ஏறும்.

(உ–ம்.) நாடு + ஆண்டான் = நாடாண்டான்.
கிணறு + எடுத்தான் = கிணறெடுத்தான்.

**249.** குற்றியலுகரம் வடமொழியாபின் கெடாது.

(உ–ம்.) விண்டு + ஐ = விண்டுவை.
இந்து + ஐ = இந்துவை.

**250.** தனிநெடில் மொழியின் முன்னும், குறில் நெடில் இணைந்த மொழியின் முன்னும் வல்லெழுத்து மிகும்.

(உ–ம்.) (தனிநெடில் மொழி.)

பூ + பூத்தது = பூப்பூத்தது.
பூ + பறித்தான் = பூப்பறித்தான்.
(குறில் நெடில் இணைந்த மொழி.)
சுறா + பாய்ந்தது = சுறாப்பாய்ந்தது.
பலா + பழம் = பலாப்பழம்.

**251.** இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லெழுத்து இயல்பாம்.

(உ–ம்.) கனி + பறித்தான் = கனி பறித்தான்.
மலர் + கொய்தான் = மலர் கொய்தான்.

**252.** இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லெழுத்து மிகும்.

(உ–ம்.) வீட்டை + கட்டினான் = வீட்டைக் கட்டினான்.
ஆற்றை + கடந்தான் = ஆற்றைக் கடந்தான்.

**253.** இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும் வல்லெழுத்து மிகும்.

(உ–ம்.) தயிர் + குடம் = தயிர்க்குடம்.
குடுமி + பையன் = குடுமிப்பையன்.

**254.** நான்காம் வேற்றுமை விரியிலும் வல்லெழுத்து மிகும்.

(உ–ம்.) அவர்க்கு + கொடுத்தான் = அவர்க்குக் கொடுத்தான்.
கூலிக்கு + செய்தான் = கூலிக்குச் செய்தான்.

**255.** ஒடு, ஓடு என்னும் மூன்றாம் வேற்றுமை உருபின் முன்னும், அது என்னும் ஆறாம் வேற்றுமை உருபின் முன்னும் வரும் வல்லெழுத்து இயல்பாம்.

(உ–ம்.) தந்தையொடு + சென்றான் = தந்தையொடுசென்றான்.
தந்தையோடு + சென்றான் = தந்தையோடுசென்றான்.
அவனது + கை = அவனதுகை.

**256.** உகர ஈற்று விகார எண்ணுப் பெயர்களின் முன் வல்லெழுத்து இயல்பாம்.

(உ—ம்.) ஒரு + சொல் = ஒருசொல்.
இரு + கண் = இருகண்.
அறு + பதம் = அறுபதம்.
எழு + பிறப்பு = எழுபிறப்பு.

[ஒன்று, இரண்டு, ஆறு, ஏழு என்னும் எண்ணுப்பெயர்கள், முறையே ஒரு, இரு, அறு, எழு என விகாரப்பட்டன என்றறிக. எண்ணுப்பெயர்கள் = எண்களின் பெயர்கள்]

**257.** வினைத்தொகையில் வல்லெழுத்து இயல்பாம்.

(உ-ம்.) நிறை + குடம் = நிறைகுடம்.
விடு + கணை = விடுகணை.
அலை + கடல் = அலைகடல்.

**258.** பெயரெச்சங்களின் முன் வல்லெழுத்து இயல்பாம்.

(உ—ம்.) படித்த + பாடம் = படித்தபாடம்.
படிக்கின்ற + பாடம் = படிக்கின்றபாடம்.
படியாத + பாடம் = படியாதபாடம்.
கரிய + குதிரை = கரியகுதிரை.
இல்லாத + பொருள் = இல்லாதபொருள்.

**259.** *அகர இகர ஈற்று வினையெச்சங்களின் முன்னும், யகர மெய்யீற்று வினையெச்சத்தின் முன்னும், வல்லெழுத்து மிகும்.

(உ—ம்.) வர + சொன்னான் = வரச்சொன்னான்.
தேடி + கொடுத்தான் = தேடிக்கொடுத்தான்.
போய் + திறந்தான் = போய்த்திறந்தான்.

**260.** பண்புத்தொகையில் உயர்திணைப் பெயரின் முன்னும், அஃறிணைப் பெயரின் முன்னும், வல்லெழுத்து மிகும்.

(உ—ம்.) நம்பி + கொற்றன் = நம்பிக்கொற்றன்.
சாரை + பாம்பு = சாரைப்பாம்பு.

[இவை முறையே நம்பியாகிய கொற்றன் என்றும், சாரையாகிய பாம்பு என்றுமாம்.]

**261.** மெய்யெழுத்துக்கு முன் உயிர் வந்தால், அவ்வுயிர் மெய்யெழுத்தோடு கூடும்.

(உ—ம்.) வேல் + அழகிது = வேலழகிது.
மால் + அடி = மாலடி.

---

* இங்கே குறித்த அகரவீறு செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சவீறு என்பதறிக.

**262.** தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்த மெய்யின்முன் உயிர் வந்தால், அந்த மெய் இரட்டும்.

(உ-ம்.) கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.
மெய் + இரட்டும் = மெய்யிரட்டும்.

[நிலைமொழியின் எழுத்தொன்று அதிகப்பட்டால் அது இரட்டுதல் எனப் படும். கல் + எறி = கல்லெறி என்பதில் நிலைமொழியின் எழுத்தாகிய லகரமெய் இரட்டியது. வருமொழியின் எழுத்தொன்று அதிகப்பட் டால் மிகுதல் எனப்படும். அந்த + பிள்ளை = அந்தப்பிள்ளை. இதில் வரு மொழியின் எழுத்தாகிய பகரமெய் மிகுந்தது.]

245-வது விதியின்படி அ + ஆடு என்னும் மொழிகள் சேரும் போது அ + வ் + ஆடு = அவாடு என்றாகவேண்டும். அவ்வாறில்லாமல் அவ்வாடு என்று மற்றோர் வகரமெய் தோன்றியது இந்த 262-வது விதியின்படி ஆகும்.

---

## IV. சொற்றொடர் இயல்.

**263**. சொற்றொடராவது, சொற்கள் அர்த்தத்தினால் ஒன் றோடு ஒன்று சம்பந்தப்பட்டுத் தொடர்ந்து நிற்பது.

**264**. அது (1) எச்சச் சொற்றொடர் என்றும், (2) முற் றுச் சொற்றொடர் என்றும் இருவகையாம்.

**265**. எச்சச் சொற்றொடராவது, பொருள் முடியாமல் நிற்கும் சொற்றொடர்.

(உ-ம்.) வீட்டுக்குச் சென்று—
அவனும் இவனும் —
வந்த மனிதன் —

**266**. முற்றுச் சொற்றொடராவது பொருள் முடிந்து நிற் கும் சொற்றொடர்.

(உ-ம்.) ராமன் வந்தான்.
நான் படித்தேன்.
நீ கடிதம் எழுது.
இவன் ராமன்.

**267.** முற்றுச் சொற்றொடர் வாக்கியம் என்றும் சொல் லப்படும்.

**268**. வாக்கியமாவது, எழுவாய் பயனிலை என்னும் முக் கிய உறுப்புகளை உடையது.

**269** அவற்றுள், எழுவாய் ஆவது, வாக்கியம் உண்டாவதற்குரிய இடம்.
[எழு=உண்டாகும் ; வாய்=இடம்.]

**270.** பயனிலையாவது, ஒன்றோடு ஒன்றாய்த் தொடர்ந்த சொற்கள் வாக்கியம் ஆவதற்குரிய அர்த்தம் தன்னிடம் பொருந்தப் பெற்றிருப்பது.
[பயன்=அர்த்தம், நிலை=நிற்கப்பெற்றது.]

[' ராமனும், கிருஷ்ணனும், ' என்றாலும், ' ராமன் கிருஷ்ணன் என்னும் இருவர் ' என்றாலும் சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்கின்றன. ஆனால் அவற்றால் வாக்கியம் ஆவதற்குரிய அர்த்தம் ஏற்படவில்லை. ' ராமனும் கிருஷ்ணனும் வந்தனர், ' ' அல்லது ராமன் கிருஷ்ணன் என்னும் இருவர் வந்தனர் ' என்றால், வாக்கியம் ஆவதற்குரிய அர்த்தம் ஏற்படுகிறது. இங்கே எந்தச் சொல்லைச் சேர்த்தபிறகு வாக்கியம் ஆவதற்குரிய அர்த்தம் ஏற்பட்டதோ அந்தச் சொல்லே பயனிலை. மேற்காட்டிய வாக்கியங்களில் ' வந்தனர் ' என்னும் சொல்லைச் சேர்த்த பிறகுதான் வாக்கியம் ஆவதற்குரிய அர்த்தம் ஏற்பட்டது. ஆகையால் அவ் வாக்கியங்களில் ' வந்தனர் ' என்பதே பயனிலையாம்.]

**271**. எழுவாய் எப்பொழுதும் பெயர்ச்சொல்லாகவே இருக்கும். பயனிலை பெரும்பாலும் வினைச்சொல்லாகவும் சிறு பான்மை பெயர்ச்சொல்லாகவும் இருக்கும்.

(உ-ம்.) ராமன் வந்தான்.

[இதில், ராமன்—எழுவாய் ; வந்தான்—பயனிலை. இங்கு எழுவாய் பெயர்ச்சொல்லாகவும், பயனிலை வினைச்சொல்லாகவும் இருக்கின்றன.]

அவன் ராமன்.

[இதில், அவன்—எழுவாய் ; ராமன்—பயனிலை. இங்கே எழுவாய் பெயர்ச்சொல். ஆனால் பயனிலை வினைச்சொல் அன்று ; பெயர்ச்சொல்.]

**272**. சில வாக்கியங்களில் எழுவாய் பயனிலைகளே யன்றிச் செயப்படுபொருள் என்று மற்றோர் உறுப்பும் வருதலுண்டு.

**273**. செயப்படுபொருளாவது கர்த்தா செய்கின்ற தொழிலை ஏற்கின்ற பொருள்.

(உ-ம்.) ராமன் வீட்டைக் கட்டினான்.

[இதில், ராமன் என்னுங் கருத்தா செய்த தொழிலாகிய கட்டுதலை ஏற்ற பொருள் ' வீடு ' என்பது. ஆதலால், வீடு செயப்படுபொருள் ஆகும்.]

**274.** பெயர்ச்சொல் பயனிலையாக இருக்கும் வாக்கியத்தினும், செயப்படுபொருள் குன்றியவினை பயனிலையாய் உள்ள வாக்கியத்தினும் செயப்படுபொருள் வராது. செயப்படுபொருள் குன்றாவினை பயனிலையாயுள்ள வாக்கியத்தில் மாத்திரமே செயப்படுபொருள் வரும்.

**275.** சாதாரணமாய், ஒரு வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், பயனிலை கடையிலும், செயப்படுபொருள் இடையிலுமாக வரும்.

| (உ—ம்.) | (எழுவாய்) | (செயப்படுபொருள்) | (பயனிலை.) |
|---|---|---|---|
| | அவன் | பாடத்தைப் | படித்தான். |

**276.** சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து நிற்பதும் உண்டு.

(உ—ம்.) இதை எடு. ('நீ' என்னும் எழுவாய் மறைந்து நின்றது.)
பூவைப் பறித்தேன். ('நான்' என்னும் எழுவாய் மறைந்து நின்றது.)

**277.** ஒரு வாக்கியத்தின் பயனிலைக்குமுன், யார், எது, எவை என்னும் வினாச்சொற்களில் பொருத்தமான ஒன்றை வைத்து வினாவினால் வரும் விடையே எழுவாயாம்.

தன்மை முன்னிலை வினைகள் பயனிலையானால், அவற்றைப் படர்க்கை ஒன்றன்பால் வினைபோல வைத்து யார் என்னும் வினாவால் வினவவேண்டும்.

| (உ—ம்.) | வாக்கியம் | வினா | எழுவாய். |
|---|---|---|---|
| தன்மை. | நான் வந்தேன் | — (யார் வந்தது.) | நான். |
| | நாம் வந்தோம் | — (யார் வந்தது.) | நாம். |
| முன்னிலை. | நீ வந்தாய் | — (யார் வந்தது.) | நீ. |
| | நீர் வந்தீர் | — (யார் வந்தது.) | நீர். |
| படர்க்கை. | அவன் வந்தான் | — (யார் வந்தான்.) | அவன். |
| | அவள் வந்தாள் | — (யார் வந்தாள்.) | அவள். |
| | அவர் வந்தார் | — (யார் வந்தார்.) | அவர். |
| | அது வந்தது | — (எது வந்தது.) | அது. |
| | அவை வந்தன | — (எவை வந்தன.) | அவை. |

**278.** ஒரு வாக்கியத்தின் பயனிலைக்கு முன், யாரை, எதை, எவற்றை என்னும் வினுச்சொற்களைத் தக்கபடி வைத்துக் கேள்வி கேட்டால், விடைபெறக்கூடாததானால் அது செயப்படுபொருள் இல்லாத வாக்கியம் எனவும், விடை பெறக் கூடியதானால் அது செயப்படுபொருள் உள்ள வாக்கியம் எனவும் நாம் அறிந்துகொள்ளலாம்.

(உ–ம்.) அவன் வந்தான்.

அவன் பார்த்தான்.

[இவற்றுள், 'வந்தான்' என்னும் பயனிலைக்குமுன் யாரை, எதை, எவற்றை என்னும் வினுச்சொற்களில் எந்தச் சொல்லை வைத்து வினவியபோதினும் விடைபெறமுடியாது; ஆதலால், 'அவன் வந்தான்' என்பது செயப்படுபொருள் இல்லாத வாக்கியமாம். 'பார்த்தான்' என்னும் சொல்லுக்குமுன் அவ்வினுச்சொற்கள் மூன்றில் எந்தச் சொல்லை வைத்துக் கேட்டாலும் விடைபெறக்கூடும்; ஆதலால், 'அவன் பார்த்தான்' என்பது செயப்படுபொருள் உள்ள வாக்கியமாம்.]

[ஒருவாக்கியத்தில் செயப்படுபொருள் அறிதற்குரிய வகையும் இதுவே.]

**279.** ஒரு வாக்கியத்தில் பயனிலையும் எழுவாயும் திணை, பால், இடம், எண்களால் ஒத்திருக்கவேண்டும்.

கீழ்வரும் வாக்கியங்களில் பயனிலையும் எழுவாயும் திணை, பால், இடம், எண்களால் ஒத்திருத்தல் காண்க.

(உ–ம்.)

| | | எழுவாய் | — பயனிலை. | |
|---|---|---|---|---|
| தன்மை. | 1. | நான் | — வந்தேன் | (ஒருமை.) |
| | 2. | நாம் | — வந்தோம் | (பன்மை.) |
| முன்னிலை. | 3. | நீ | — வந்தாய் | (ஒருமை.) |
| | 4. | நீர் | — வந்தீர் | (பன்மை.) |
| படர்க்கை. | 5. | அவன் | — வந்தான் | (ஆண்பால்.) |
| | 6. | அவள் | — வந்தாள் | (பெண்பால்.) |
| | 7. | அவர் | — வந்தார் | (பலர்பால்.) |
| | 8. | அது | — வந்தது | (ஒன்றன்பால்.) |
| | 9. | அவை | — வந்தன | (பலவின்பால்.) |

**280.** எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்கள் அடையடுத்தும் வருதலுண்டு.

(உ—ம்.) 1. நல்ல பையன் வந்தான்.

2. அவன் நொண்டிக் குதிரையை அடித்தான்.

3. நாய் வெடுக்கென்று கடித்தது.

[இவைகளில், 1. 'நல்ல' என்பது பையன் என்னும் எழுவாயையும் 2. 'நொண்டி' என்பது குதிரையை என்னும் செயப்படுபொருளையும், 3. 'வெடுக்கென்று' என்பது கடித்தது என்னும் பயனிலையையும் அடுத்து வந்த அடைமொழிகளாகும். ஆகையால், 'பையன்' என்னும் எழுவாயும், 'குதிரை' என்னும் செயப்படுபொருளும், 'கடித்தது' என்னும் பயனிலையும் அடையடுத்து வந்தன வாகும்.]

---

## அனுபந்தம்—1.

# அப்பியாசங்கள்.

### எழுத்தியல்.

1. குற்றெழுத்துகளில் விஞவெழுத்தாய் வருவது எது?

2. அதற்கு இனமான விஞவெழுத்து எது?

3. 'அரசன்' என்பதில் உள்ள அகரத்திற்கும், 'அவன்' என்பதில் உள்ள அகரத்திற்கும் வேறுபாடு என்ன?

4. ச், ண், ல்—இவற்றிற்கு இனமான எழுத்துகள் எவை?

5. அ, க, நா, ம் — இவை ஒவ்வொன்றிற்கும் உரிய மாத்திரை என்ன?

6. 'சுக்கு'—என்பதில் குற்றியலுகரம் எது? குற்றியலுகரம் அல்லாத உகரம் எது? காரணம் கூறு.

7. 'ஒரு படகு இருந்தால் இரண்டு பெயரும் ஆறுகடந்து அக்கரைக்கு இப்பொழுது போகலாம்' என்று முருகன் சொன்னான்,—இவ் வாக்கியத்தில் குற்றியலுகரம் வரும் வார்த்தைகள் எவை?

8. ஆய்த எழுத்துக்கு மாத்திரை என்ன?

9. ஆய்த எழுத்துக்குக் கூறிய மாத்திரை உள்ள எழுத்துகள் எவை?

10. 'வந்தான்' என்னும் வார்த்தையில் உள்ள எழுத்துகளின் மொத்த மாத்திரை எவ்வளவு?

### சொல்லியல்.

11. ஒருமை எண்ணுக்குரிய பால்கள் எவை?

12. உயர்திணைக்குரிய பால்கள் எவை?

13. சினைப்பெயராவது யாது?

14. உயர்திணை ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாய் வரும் பெயர் எது?

15. இருதிணைக்கும் பொதுவான பெயர்கள் எவை ?

16. முதல் வேற்றுமையின் உருபு யாது ?

17. சொல்லுருபாவது யாது ? எந்தெந்த வேற்றுமைகளுக்குச் சொல்லுருபுகள் உண்டு ? உதாரணம் கூறு.

18. இரண்டாம் வேற்றுமையின் பொருள்கள் எவை ?

19. கருத்தாப்பொருள் எந்த வேற்றுமைக் குரியது ? அது எத்தனை வகைப்படும் ?

20. நாம் என்பது ஆறும் வேற்றுமை ஏற்றால் எவ்வாறும் ?

21. தெரிநிலைவினைக்கும் குறிப்புவினைக்கும் வேறுபாடென்ன ?

22. பிறவினையாவது யாது ?

23. முன்னிலை வினைமுற்றுக்கும் ஏவல் வினைமுற்றுக்கும் வேறு பாடென்ன ?

24. 'வந்த' என்பது என்ன வினை ? இதில் காலத்தைக் காட்டு வது எது ?

25. வேற்றுமை உருபுகள் என்ன சொற்கள் ?

26. உவமை உருபுகளாவன எவை ?

27. சுட்டும் வினவும் எவ்வகைச் சொற்களாம் ?

28. உரிச்சொற்களாவன யாவை ?

29. அவை எத்தனை வகைப்படும் ?

30. 'இவன் பசுப்போல இருந்து புலிபோலப் பாயும் குணம் உள்ளவன்' — இவ்வாக்கியத்தில் ஒவ்வொரு சொல்லும் இன்ன வகைச்சொல் என்று கூறுக.

31. பகுபதம் எத்தனை வகைப்படும் ? அவை எவை ?

32. பகுதியாவது யாது ?

33. சந்தி விகாரங்கள் என்பன எவை ?

34. குழூஉக்குறி என்றால் என்ன ?

35. இலக்கணப்போலிக்கு ஓர் உதாரணம் கூறுக.

36. இடக்கரடக்கலுக்கும் மங்கலத்துக்கும் வேறுபா டென்ன ?

37. தமிழில் வேறுபாஷைச் சொற்கள் வந்து வழங்குவ துண்டா ? உதாரணம் கூறுக.

38. வடசொல்லாவது யாது ?

39. தற்சமம் தற்பவம் என்பவற்றை விளக்கி, ஒவ்வொன்றுக்கும் இவ்விரண்டு உதாரணங்கள் கூறுக.

40. அறிஞன், வலைச்சி, பொன்னி, கண்ணன், கரியன்—இவற்றைப் பிரித்து ஒவ்வொன்றினுக்கும் உறுப்புகள் இவை எனக் காட்டுக.

41. நான்கு வினைப் பகுபதங்கள் கூறி அவற்றைப் பிரித்து ஒவ்வொன்றினுக்கும் உறுப்புகள் இவையெனக் காட்டுக.

### புணரியல்.

42. பொருட்புணர்ச்சியாவது யாது?

43. அன்மொழித்தொகை என்றால் என்ன?

44. இயல்புப் புணர்ச்சிக்கு இரண்டு உதாரணங்கள் கூறுக.

45. உடம்படுமெய்யாவது யாது?

46. மிகுதலுக்கும் இரட்டுதலுக்கும் வேறுபாடு என்ன?

47. 'குறை + குடம் + கூத்து + ஆடும்'—இந்த வாக்கியத்தில் உள்ள சொற்களைச் சேர்த்தெழுதிப் புணர்ச்சிவிதி கூறுக.

### சொற்றொடரியல்.

48. வாக்கியமாவது யாது?

49. அடையடுத்துவந்த எழுவாயும், பயனிலையும், செயப்படுபொருளும் உள்ளதாக ஒரு வாக்கியம் கூறுக.

---

## அனுபந்தம்—2.

# வினைவிளக்க அட்டவணை.

சொல்லியலில் 92 முதல் 150 வரையில் உள்ள விதிகளால் கூறப்பட்ட வினைச்சொல்லின் விகற்பங்களெல்லாம் கீழே அட்டவணைப்படுத்திக் காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வட்டவணையின் உதவியால் பலவகைப்பட்ட வினைச்சொற்களையும் தெளிவாயும் விளக்கமாயும் அறிந்துகொள்ளலாம். அட்டவணையிற் காட்டிய பகுதிகளையும் விகுதிகளையுமல்லாமல் வேறு பகுதிகளையும் விகுதிகளையும் சேர்த்து அட்டவணை முறைப்படி அமைத்துப் பழகுவது மாணாக்கர்களுக்கு மிகுந்த பயனைத் தரும்.

முற்றுவினை

## தன்மை ஒருமை — நான்

| | | பகுதி | உடன்பாடு | | | எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|
| | | | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | |
| தன்வினை | செயப்படுபொருள் குன்றாதன | தொடு | தொட்டேன் | தொடுகின்றேன் | தொடுவேன் | தொடேன் |
| | | தேடு | தேடினேன் | தேடுகின்றேன் | தேடுவேன் | தேடேன் |
| | | கொள் | கொண்டேன் | கொள்கின்றேன் | கொள்வேன் | கொள்ளேன் |
| | | கல் | கற்றேன் | கற்கின்றேன் | கற்பேன் | கல்லேன் |
| | செயப்படுபொருள் குன்றியன | நட | நடந்தேன் | நடக்கின்றேன் | நடப்பேன் | நடவேன் |
| | | திரும்பு | திரும்பினேன் | திரும்புகின்றேன் | திரும்புவேன் | திரும்பேன் |
| | | வா | வந்தேன் | வருகின்றேன் | வருவேன் | வரேன் |
| | | ஆறு | ஆறினேன் | ஆறுகின்றேன் | ஆறுவேன் | ஆறேன் |
| பிறவினை | | நடப்பி | நடப்பித்தேன் | நடப்பிக்கின்றேன் | நடப்பிவிப்பேன் | நடப்பியேன் |
| | | திருப்பு | திருப்பினேன் | திருப்புகின்றேன் | திருப்புவேன் | திருப்பேன் |
| | | ஆற்று | ஆற்றினேன் | ஆற்றுகின்றேன் | ஆற்றுவேன் | ஆற்றேன் |
| | | கற்பி | கற்பித்தேன் | கற்பிக்கின்றேன் | கற்பிப்பேன் | கற்பியேன் |

முற்றுவினை

## தன்மைப் பன்மை — நாம்

| | | பகுதி | உடன்பாடு | | | எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|
| | | | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | |
| தன்வினை | செயப்படுபொருள் குன்றாதன | தொடு | தொட்டோம் | தொடுகின்றோம் | தொடுவோம் | தொடோம் |
| | | தேடு | தேடினோம் | தேடுகின்றோம் | தேடுவோம் | தேடோம் |
| | | கொள் | கொண்டோம் | கொள்கின்றோம் | கொள்வோம் | கொள்ளோம் |
| | | கல் | கற்றோம் | கற்கின்றோம் | கற்போம் | கல்லோம் |
| | செயப்படுபொருள் குன்றியன | நட | நடந்தோம் | நடக்கின்றோம் | நடப்போம் | நடவோம் |
| | | திரும்பு | திரும்பினோம் | திரும்புகின்றோம் | திரும்புவோம் | திரும்போம் |
| | | வா | வந்தோம் | வருகின்றோம் | வருவோம் | வரோம் |
| | | ஆறு | ஆறினோம் | ஆறுகின்றோம் | ஆறுவோம் | ஆறோம் |
| பிறவினை | | நடப்பி | நடப்பித்தோம் | நடப்பிக்கின்றோம் | நடப்பிப்போம் | நடப்பியோம் |
| | | திருப்பு | திருப்பினோம் | திருப்புகின்றோம் | திருப்புவோம் | திருப்போம் |
| | | வருவி | வருவித்தோம் | வருவிக்கின்றோம் | வருவிப்போம் | வருவியோம் |
| | | ஆற்று | ஆற்றினோம் | ஆற்றுகின்றோம் | ஆற்றுவோம் | ஆற்றோம் |

முற்றுவினை

## முன்னிலை ஒருமை — நீ

| | | பகுதி | உடன்பாடு | | | எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|
| | | | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | |
| தன்வினை | செய்யப்படுபொருள் குன்றாதன | தொடு | தொட்டாய் | தொடுகின்றாய் | தொடுவாய் | தொடாய் |
| | | தேடு | தேடினாய் | தேடுகின்றாய் | தேடுவாய் | தேடாய் |
| | | கொள் | கொண்டாய் | கொள்கின்றாய் | கொள்வாய் | கொள்ளாய் |
| | | கல் | கற்றாய் | கற்கின்றாய் | கற்பாய் | கல்லாய் |
| | செய்யப்படுபொருள் குன்றியன | நட | நடந்தாய் | நடக்கின்றாய் | நடப்பாய் | நடவாய் |
| | | திரும்பு | திரும்பினாய் | திரும்புகின்றாய் | திரும்புவாய் | திரும்பாய் |
| | | வா | வந்தாய் | வருகின்றாய் | வருவாய் | வாராய் |
| | | ஆறு | ஆறினாய் | ஆறுகின்றாய் | ஆறுவாய் | ஆறாய் |
| பிறவினை | | நடப்பி | நடப்பித்தாய் | நடப்பிக்கின்றாய் | நடப்பிப்பாய் | நடப்பியாய் |
| | | திருப்பு | திருப்பினாய் | திருப்புகின்றாய் | திருப்புவாய் | திருப்பாய் |
| | | வருவி | வருவித்தாய் | வருவிக்கின்றாய் | வருவிப்பாய் | வருவியாய் |
| | | ஆற்று | ஆற்றினாய் | ஆற்றுகின்றாய் | ஆற்றுவாய் | ஆற்றாய் |

முற்றுவினை

## முன்னிலைப் பன்மை — நீர்

| | | பகுதி | உடன்பாடு | | | எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|
| | | | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | |
| தன்வினை | செயப்படுபொருள் குன்றாதன | தொடு | தொட்டீர் | தொடுகின்றீர் | தொடுவீர் | தொடீர் |
| | | தேடு | தேடினீர் | தேடுகின்றீர் | தேடுவீர் | தேடீர் |
| | | கொள் | கொண்டீர் | கொள்கின்றீர் | கொள்வீர் | கொள்ளீர் |
| | | கல் | கற்றீர் | கற்கின்றீர் | கற்பீர் | கல்லீர் |
| | செயப்படுபொருள் குன்றியன | நட | நடந்தீர் | நடக்கின்றீர் | நடப்பீர் | நடவீர் |
| | | திரும்பு | திரும்பினீர் | திரும்புகின்றீர் | திரும்புவீர் | திரும்பீர் |
| | | வா | வந்தீர் | வருகின்றீர் | வருவீர் | வரீர் |
| | | ஆறு | ஆறினீர் | ஆறுகின்றீர் | ஆறுவீர் | ஆறீர் |
| பிறவினை | | நடப்பி | நடப்பித்தீர் | நடப்பிக்கின்றீர் | நடப்பிப்பீர் | நடப்பியீர் |
| | | திருப்பு | திருப்பினீர் | திருப்புகின்றீர் | திருப்புவீர் | திருப்பீர் |
| | | வருவி | வருவித்தீர் | வருவிக்கின்றீர் | வருவிப்பீர் | வருவியீர் |
| | | ஆற்று | ஆற்றினீர் | ஆற்றுகின்றீர் | ஆற்றுவீர் | ஆற்றீர் |

முற்றுவினை

## படர்க்கை ஆண்பால் — அவன்

| | | பகுதி | உடன்பாடு | | | எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|
| | | | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | |
| தன்வினை | செயப்படுபொருள் குன்றாதன | தொடு | தொட்டான் | தொடுகின்றான் | தொடுவான் | தொடான் |
| | | தேடு | தேடினான் | தேடுகின்றான் | தேடுவான் | தேடான் |
| | | கொள் | கொண்டான் | கொள்கின்றான் | கொள்வான் | கொள்ளான் |
| | | கல் | கற்றான் | கற்கின்றான் | கற்பான் | கல்லான் |
| | செயப்படுபொருள் குன்றியன | நட | நடந்தான் | நடக்கின்றான் | நடப்பான் | நடவான் |
| | | திரும்பு | திரும்பினான் | திரும்புகின்றான் | திரும்புவான் | திரும்பான் |
| | | வா | வந்தான் | வருகின்றான் | வருவான் | வரான் |
| | | ஆறு | ஆறினான் | ஆறுகின்றான் | ஆறுவான் | ஆறான் |
| பிறவினை | | நடப்பி | நடப்பித்தான் | நடப்பிக்கின்றான் | நடப்பிப்பான் | நடப்பியான் |
| | | திருப்பு | திருப்பினான் | திருப்புகின்றான் | திருப்புவான் | திருப்பான் |
| | | வருவி | வருவித்தான் | வருவிக்கின்றான் | வருவிப்பான் | வருவியான் |
| | | ஆற்று | ஆற்றினான் | ஆற்றுகின்றான் | ஆற்றுவான் | ஆற்றான் |

முற்றுவினை

## படர்க்கைப் பெண்பால் — அவள்

| | | பகுதி | உடன்பாடு | | | எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|
| | | | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | |
| தன்வினை | செயப்படுபொருள் குன்றாதன | தொடு | தொட்டாள் | தொடுகின்றாள் | தொடுவாள் | தொடாள் |
| | | தேடு | தேடினாள் | தேடுகின்றாள் | தேடுவாள் | தேடாள் |
| | | கொள் | கொண்டாள் | கொள்கின்றாள் | கொள்வாள் | கொள்ளாள் |
| | | கல் | கற்றாள் | கற்கின்றாள் | கற்பாள் | கல்லாள் |
| | செயப்படுபொருள் குன்றியன | நட | நடந்தாள் | நடக்கின்றாள் | நடப்பாள் | நடவாள் |
| | | திரும்பு | திரும்பினாள் | திரும்புகின்றாள் | திரும்புவாள் | திரும்பாள் |
| | | வா | வந்தாள் | வருகின்றாள் | வருவாள் | வாராள் |
| | | ஆறு | ஆறினாள் | ஆறுகின்றாள் | ஆறுவாள் | ஆறாள் |
| பிறவினை | | நடப்பி | நடப்பித்தாள் | நடப்பிக்கின்றாள் | நடப்பிப்பாள் | நடப்பியாள் |
| | | திருப்பு | திருப்பினாள் | திருப்புகின்றாள் | திருப்புவாள் | திருப்பாள் |
| | | வருவி | வருவித்தாள் | வருவிக்கின்றாள் | வருவிப்பாள் | வருவியாள் |
| | | ஆற்று | ஆற்றினாள் | ஆற்றுகின்றாள் | ஆற்றுவாள் | ஆற்றாள் |

முற்றுவினை

## படர்க்கைப் பலர்பால் — அவர்

| | | பகுதி | உடன்பாடு | | | எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|
| | | | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | |
| தன்வினை | செயப்படுபொருள் குன்றாதன | தொடு | தொட்டார் | தொடுகின்றார் | தொடுவார் | தொடார் |
| | | தேடு | தேடினார் | தேடுகின்றார் | தேடுவார் | தேடார் |
| | | கொள் | கொண்டார் | கொள்கின்றார் | கொள்வார் | கொள்ளார் |
| | | கல் | கற்றார் | கற்கின்றார் | கற்பார் | கல்லார் |
| | செயப்படுபொருள் குன்றியன | நட | நடந்தார் | நடக்கின்றார் | நடப்பார் | நடவார் |
| | | திரும்பு | திரும்பினார் | திரும்புகின்றார் | திரும்புவார் | திரும்பார் |
| | | வா | வந்தார் | வருகின்றார் | வருவார் | வரார் |
| | | ஆறு | ஆறினார் | ஆறுகின்றார் | ஆறுவார் | ஆறார் |
| பிறவினை | | நடப்பி | நடப்பித்தார் | நடப்பிக்கின்றார் | நடப்பிப்பார் | நடப்பியார் |
| | | திருப்பு | திருப்பினார் | திருப்புகின்றார் | திருப்புவார் | திருப்பார் |
| | | வருவி | வருவித்தார் | வருவிக்கின்றார் | வருவிப்பார் | வருவியார் |
| | | ஆற்று | ஆற்றினார் | ஆற்றுகின்றார் | ஆற்றுவார் | ஆற்றார் |

முற்றுவினை

## படர்க்கை ஒன்றன்பால் — அது

| | | பகுதி | உடன்பாடு | | | எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|
| | | | இறந்தகாலம் | நிகழ்காலம் | *எதிர்காலம் | |
| தன்வினை | செயப்படுபொருள் குன்றாதன | தொடு | தொட்டது | தொடுகின்றது | தொடும் | தொடாது |
| | | தேடு | தேடியது | தேடுகின்றது | தேடும் | தேடாது |
| | | கொள் | கொண்டது | கொள்கின்றது | கொள்ளும் | கொள்ளாது |
| | | கல் | கற்றது | கற்கின்றது | கற்கும் | கற்காது |
| | செயப்படுபொருள் குன்றியன | நட | நடந்தது | நடக்கின்றது | நடக்கும் | நடக்காது |
| | | திரும்பு | திரும்பியது | திரும்புகின்றது | திரும்பும் | திரும்பாது |
| | | வா | வந்தது | வருகின்றது | வரும் | வராது |
| | | ஆறு | ஆறியது | ஆறுகின்றது | ஆறும் | ஆறாது |
| பிறவினை | | நடப்பி | நடப்பித்தது | நடப்பிக்கின்றது | நடப்பிக்கும் | நடப்பியாது |
| | | திருப்பு | திருப்பியது | திருப்புகின்றது | திருப்பும் | திருப்பாது |
| | | வருவி | வருவித்தது | வருவிக்கின்றது | வருவிக்கும் | வருவியாது |
| | | ஆற்று | ஆற்றியது | ஆற்றுகின்றது | ஆற்றும் | ஆற்றாது |

* வழக்கு நோக்கி உம் விகுதி கொள்ளப்பட்டது.

முற்றுவினை

## படர்க்கைப் பலவின்பால் — அவை

| | | பகுதி | உடன்பாடு: இறந்தகாலம் | உடன்பாடு: நிகழ்காலம் | உடன்பாடு: *எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|
| தன்வினை | செயப்படுபொருள் குன்றாதன | தொடு | தொட்டன | தொடுகின்றன | தொடும் | தொடா |
| | | தேடு | தேடின | தேடுகின்றன | தேடும் | தேடா |
| | | கொள் | கொண்டன | கொள்கின்றன | கொள்ளும் | கொள்ளா |
| | | கல் | கற்றன | கற்கின்றன | கற்கும் | கல்லா |
| | செயப்படுபொருள் குன்றியன | நட | நடந்தன | நடக்கின்றன | நடக்கும் | நடவா |
| | | திரும்பு | திரும்பின | திரும்புகின்றன | திரும்பும் | திரும்பா |
| | | வா | வந்தன | வருகின்றன | வரும் | வாரா |
| | | ஆறு | ஆறின | ஆறுகின்றன | ஆறும் | ஆறா |
| பிறவினை | | நடப்பி | நடப்பித்தன | நடப்பிக்கின்றன | நடப்பிக்கும் | நடப்பியா |
| | | திருப்பு | திருப்பின | திருப்புகின்றன | திருப்பும் | திருப்பா |
| | | வருவி | வருவித்தன | வருவிக்கின்றன | வருவிக்கும் | வருவியா |
| | | ஆற்று | ஆற்றின | ஆற்றுகின்றன | ஆற்றும் | ஆற்றா |

* வழக்கு நோக்கி உம் விகுதி கொள்ளப்பட்டது.

எச்சவினை

# பெயரெச்சம்

| | | பகுதி | உடன்பாடு | | | எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|
| | | | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | |
| தன்வினை | செயப்படுபொருள் குன்றாதன | தொடு | தொட்ட | தொடுகின்ற | தொடும் | தொடாத |
| | | தேடு | தேடிய | தேடுகின்ற | தேடும் | தேடாத |
| | | கொள் | கொண்ட | கொள்கின்ற | கொள்ளும் | கொள்ளாத |
| | | கல் | கற்ற | கற்கின்ற | கற்கும் | கல்லாத |
| | செயப்படுபொருள் குன்றியன | நட | நடந்த | நடக்கின்ற | நடக்கும் | நடக்காத |
| | | திரும்பு | திரும்பிய | திரும்புகின்ற | திரும்பும் | திரும்பாத |
| | | வா | வந்த | வருகின்ற | வரும் | வராத |
| | | ஆறு | ஆறிய | ஆறுகின்ற | ஆறும் | ஆறாத |
| பிறவினை | | நடப்பி | நடப்பித்த | நடப்பிக்கின்ற | நடப்பிக்கும் | நடப்பியாத |
| | | திருப்பு | திருப்பிய | திருப்புகின்ற | திருப்பும் | திருப்பாத |
| | | வருவி | வருவித்த | வருவிக்கின்ற | வருவிக்கும் | வருவியாத |
| | | ஆற்று | ஆற்றிய | ஆற்றுகின்ற | ஆற்றும் | ஆற்றாத |

எச்சவினை

## வினையெச்சம்

| | | பகுதி | உடன்பாடு | | | எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|
| | | | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | |
| தன்வினை | செயப்படுபொருள் குன்றுதன | தொடு<br>தேடு<br>கொள்<br>கல் | தொட்டு<br>தேடி<br>கொண்டு<br>கற்று | தொட<br>தேட<br>கொள்ள<br>கற்க | தொட்டால்<br>தேடிஞல்<br>கொண்டால்<br>கற்ருல் | தொடாமல்<br>தேடாமல்<br>கொள்ளாமல்<br>கற்காமல் |
| | செயப்படுபொருள் குன்றியன | நட<br>திரும்பு<br>வா<br>ஆறு | நடந்து<br>திரும்பி<br>வந்து<br>ஆறி | நடக்க<br>திரும்ப<br>வர<br>ஆற | நடந்தால்<br>திரும்பிஞல்<br>வந்தால்<br>ஆறிஞல் | நடக்காமல்<br>திரும்பாமல்<br>வராமல்<br>ஆருமல் |
| பிறவினை | | நடப்பி<br>திருப்பு<br>வருவி<br>ஆற்று | நடப்பித்து<br>திருப்பி<br>வருவித்து<br>ஆற்றி | நடப்பிக்க<br>திருப்ப<br>வருவிக்க<br>ஆற்ற | நடப்பித்தால்<br>திருப்பிஞல்<br>வருவித்தால்<br>ஆற்றிஞல் | நடப்பியாமல்<br>திருப்பாமல்<br>வருவியாமல்<br>ஆற்ருமல் |

எதிர்மறைப்பன்மை ஏவல், பகுதியோடு அல், ஏல், ஆல் என்னும் எதிர்மறை விகுதிகளுள் ஏற்ற ஒன்றும் மின், ஈர் என்னும் பன்மை விகுதிகளுள் ஒன்றும் சேர்ந்தாவன.

## ஏவல் வினைமுற்று

(எதிர்காலத்தில் மாத்திரம் வரும்)

| | | பகுதி | ஒருமை — நீ | | | | பன்மை — நீர் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | உடன்பாடு | *விகுதி | எதிர்மறை | விகுதி | உடன்பாடு | விகுதி | எதிர்மறை |
| தன்வினை | செயப்படுபொருள் குன்றாதன | தொடு | தொடுதி | இ | தொடால் | ஆல் | தொடுமின் | மின் | தொடன்மின் |
| | | தேடு | தேடாய் | ஆய் | தேடேல் | ஏல் | தேடுமின் | மின் | தேடன்மின் |
| | | கொள் | கொள்ளுதி | இ | கொள்ளல் | அல் | கொள்ளும் | உம் | கொள்ளன்மின் |
| | | கல் | கல்லாய் | ஆய் | கல்லேல் | ஏல் | கல்லீர் | ஈர் | கல்லன்மின் |
| | செயப்படுபொருள் குன்றியன | நட | நடவாய் | ஆய் | நடவல் | அல் | நடமின் | மின் | நடவலீர் |
| | | திரும்பு | திரும்புதி | இ | திரும்பேல் | ஏல் | திரும்புமின் | மின் | திரும்பலீர் |
| | | வா | வருதி | இ | வாரால் | ஆல் | வாரும் | உம் | வரன்மின் |
| | | ஆறு | ஆறுதி | இ | ஆறேல் | ஏல் | ஆறும் | உம் | ஆறன்மின் |
| பிறவினை | | நடப்பி | நடப்பியாய் | ஆய் | நடப்பியேல் | ஏல் | நடப்பியும் | உம் | நடப்பியன்மின் |
| | | திருப்பு | திருப்புதி | இ | திருப்பல் | அல் | திருப்புமின் | மின் | திருப்பலீர் |
| | | வருவி | வருவியாய் | ஆய் | வருவியேல் | ஏல் | வருவியும் | உம் | வருவியேன்மின் |
| | | ஆற்று | ஆற்றாய் | ஆய் | ஆற்றல் | அல் | ஆற்றுமின் | மின் | ஆற்றன்மின் |

* இவ்வுடன்பாட்டு ஒருமை விகுதி குன்றிப் பகுதியளவாய் நின்று ஏவலுணர்த்தலும் உண்டு.

# குறிப்பு வினை

## முற்று

| | | *பகுதி | உடன்பாடு | எதிர்மறை |
|---|---|---|---|---|
| தன்மை | ஒருமை<br>பன்மை | பொருள்<br>ஊர் | பொருளேன்<br>ஊரேம் | பொருளில்[illegible]<br>ஊரிலேம் |
| முன்னிலை | ஒருமை<br>பன்மை | நாள்<br>கண் | நாளினை<br>கண்ணீர் | நாளிலாய்<br>கண்ணிலீர் |
| படர்க்கை | ஆண்பால்<br>பெண் ,,<br>பலர் ,,<br>ஒன்றன் ,,<br>பலவின் ,, | நன்மை<br>நடை<br>பொன்<br>குழை<br>தீமை | நல்லன்<br>நடையள்<br>பொன்னர்<br>குழையது<br>தீயன | நன்றிலன்<br>நடையிலள்<br>பொன்னிலர்<br>குழையிலது<br>தீதில |

## எச்சம்

| பகுதி | | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|---|
| தீமை | உடன்பாடு | தீய | தீதாக |
| | எதிர்மறை | தீதில்லாத | தீதின்றி |

* குறிப்புவினை பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறனடியாகப் பிறந்து காலத்தைக் குறிப்பாய்க் காட்டும் என்பதனை 35–ம் பக்கத்திற் காண்க.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 12856.

## இயற்கை விளக்க வாசகங்கள்.

### திவான்பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றியவை.

சிறுவயதிலேயே 'ஸைன்ஸ்' என்னும் இயற்கை ஞானத்தைப் பிள்ளைகளுக்குச் சிறிதுசிறிதாகப் புகட்டவேண்டுமென்பது இப்பொழுது உயர்ந்த கல்வியதிகாரிகள் ஒவ்வொருவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பல வருஷங்களுக்கு முன்னேயே இவ்வுண்மையை அறிந்து காலஞ்சென்ற திவான்பஹதூர்-வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் 'இயற்கை விளக்க வாசகங்கள்' என்ற தொகுதியில் பல பாடபுத்தகங்களை எழுதி வெளியிட்டார்கள். அவை கல்வியதிகாரிகளாலும் உபாத்திமார்களாலும் மிகவும் பாராட்டப்பட்டன. ஆனால் அவை எழுதப்பட்ட காலத்துக்கும் தற்காலத்துக்கும் இடையே, இயற்கை ஞானமும் போதனை முறையும் மிக விருத்தி யடைந்துள்ளபடியால், அவ் விருத்தியை யனுசரித்து அவை யாவும் திருத்தி மாற்றி விரித்துப் புதுமுறையில் வெளியிடப் பட்டுள்ளன.

அவை வருமாறு:—

| | | அ. | பை. |
|---|---|---|---|
| முதற் புத்தகம் | .. .. .. .. | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் | .. .. .. | 5 | 0 |
| மூன்றாம் ,, | .. .. .. .. | 5 | 0 |
| நான்காம் ,, | .. .. .. .. | 5 | 0 |
| ஐந்தாம் ,, | .. .. .. .. | | |

திவான்பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய

## சிறுவர்களுக்காகும் நீதிகதா கிருதிகள்.

| | | | |
|---|---|---|---|
| 3-வது, 4-வது வகுப்புகளுக்கு .. | .. .. | 4 | 0 |

'ஈஸாப் கதைகள்' என்று நீதிபுகட்டும் பல சிறு கதைகள் வழங்கி வருவதைப் பலரும் அறிந்திருக்கலாம். பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு அவை மிகவும் ஏற்றவை. ஆதலால் காலஞ்சென்ற திவான்பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள், அக்கதைகளில் சிலவற்றை, சிறுவர்கள் இசையுடன் பாடுவதற்கேற்ற கீர்த்தனைகளாக, எளிய நடையில் இயற்றியுள்ளார். அவை, இப்பொழுது நல்ல சடிதத்தில் நீதிகதா கிருதிகள் என்னும் புத்தகமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதையும் ஓர் ஓர் அழகிய படத்துடன் பதிக்கப்பெற்றுள்ளது.

# தமிழ் இலக்கியத் திரட்டு.

திவான்பஹதூர்—ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்
(எப்.ஆர்.எச்.எஸ்.—லண்டன் :) (எம்.ஆர்.ஏ.எஸ்.—லண்டன் :) தொகுத்தது

நம் முன்னோர் தேடிவைத்த எல்லையற்ற செந்தமிழ்ச் செல்வக் களஞ்சியத்தின் உட்புகுந்து உள்ளதை அனுபவிக்க விரும்பும் மாணவர்க்கு இது பொக்கிஷத் திறவுகோலாகும்.

இத்தொகுதியில் இதுகாறும் இரண்டு பகுதிகள் வெளிவந்துள்ளன. இவற்றுள், பூண்டி—அரங்கநாத முதலியார், எம்.ஏ., ஆறுமுக நாவலர், வேதநாயகம்பிள்ளை, தி. செல்வக்கேசவராய முதலியார், எம்.ஏ., திவான் பஹதூர்—ச. பவானந்தம்பிள்ளை, வித்துவான்—தாண்டவராய முதலியார், பி. விஜயரங்க முதலியார், எப்.எம்.யு., திவான்பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார், பி.வி. ராமசாமி ராஜூ, பி.ஏ. முதலிய பிரபல வித்துவசிகாமணிகள் எழுதிய பிற்கால இலக்கியங்களினின்றும், — நளவெண்பா, குசேலோபாக்கியானம், கபிலரகவல், அரிச்சந்திரபுராணம், தாயுமானவர், பட்டினத்தார், தேவாரம், நாலாயிரத் திவ்விய பிரபந்தம், அருட்பா, வில்லிபாரதம், கம்பராமாயணம், திருக்குறள், நாலடி, நான்மணி, ஏலாதி, திரிகடுகம், நீதிநெறிவிளக்கம் முதலிய முற்கால இலக்கியங்களினின்றும் இனிமையும், அருமையும், சுலபமுமான பல பகுதிகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

பகுதி I .... .... .... .... அணா 12.

(இதில், இராஜபக்தி, அறிவுவளர்ச்சி, சீதாகலியாணம், சகுந்தலை முதலிய 16 வசன பாடங்களும், 8 செய்யுட் பாடங்களும் உள்ளன.)

பகுதி II .... .... .... .... அணா 8

(இதில், கல்வியின் பெருமை, மந்தரையின் சூழ்ச்சி, போலிவைத்தியர் முதலிய 15 வசனபாடங்களும் 8 செய்யுட் பாடங்களும் உள்ளன.)

குறிப்பு : இவை நான்காவது ஐந்தாவது பாரங்களுக்கு ஏற்றவை.

# தமிழ் இலக்கணம்.

முதற் புஸ்தகம் (ஐந்தாம் வகுப்புக்கு ஏற்றது.)
இரண்டாம் புஸ்தகம் (ஆறும் வகுப்புக்கு ஏற்றது.)
வித்வான் மகாலிங்கையர் அவர்கள் இயற்றிய இலக்கணம்.
வித்வான் இராசகோபால பிள்ளை அவர்கள் இயற்றிய இலக்கணம்.
வித்வான் இராமாநுஜ கவிராயர் அவர்கள் இயற்றிய இலக்கணம்.
வித்வான் சரவணப்பெருமாளையரவர்களும் வித்வான் விசாகப்பெருமாளையரவர்களும் இயற்றிய இலக்கணம்.
நன்னூல் (புதிய பதிப்பு. உயர்தர வகுப்புகளுக்கு ஏற்றது.)

திவான்பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய

# தமிழ் இலக்கண விளையாட்டு.

## PICTORIAL PLAY GRAMMAR.

பாகம்-1. நான்காம் வகுப்புக்கு. பாகம்-2. ஐந்தாம் வகுப்புக்கு